₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 11 | November 2021



**எதைச் செய்தாலும்,**
**அதை மனுஷர்களுக்கென்று**
**செய்யாமல், கர்த்தருக்கென்றே**
**மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

(கொலோ. 3:24)

## கொடுப்பவர்கள், கொடுத்து வைத்தவர்கள்!



# ஆரம்ப வரிகள்...

கிறிஸ்தவத்தின் முழுஅடிப்படை தத்துவமும் 'கொடு' என்கிற ஒரே வார்த்தையில் அடங்கியுள்ளது. பிதாவாகிய தேவன் தமது ஏகசுதனையே இவ்வுலகிற்குக் கொடுத்தார்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது இரட்சிப்பிற்காக தம்மையே 'கிருபாதார பலியாகக்' கொடுத்தார். தேவனின் இயற்கை சுபாவமே கொடுப்பதில் இருப்பதால், நாமும் அவருடையப் பணிக்கென கொடுக்கும்போது அவர் நம்மில் பிரியம் கொள்கிறார்.

முற்பிதாக்களின் காலங்களில் 'தசமபாகம்' தன்னார்வத்துடன் கொடுக்கப்பட்டது. மோசேயால் 'தசமபாகச் சட்டம்' வழங்கப்படுவதற்கு முன்பே, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் தன்னார்வத்துடன் தசமபாகம் கொடுத்து வந்ததாக வேதாகமம் கூறுகிறது (ஆதி.14:20; 28:22). பழைய ஏற்பாட்டுக் காலத்தில், அதாவது இஸ்ரவேல் என்கிற ஒரு சமுதாய அமைப்பு உருவானப் பிறகு, மோசே தசமபாகம் கொடுப்பதைச் சட்டமாக்கினார். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், தசமபாகம் கட்டாயமானதாகக் கருதப்படாமல், தேவனுக்கென்று நாம் ஒவ்வொருவரும் 'முழுமனதுடன் கொடுக்க அழைக்கப்படுகிறோம். "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (2கொரி.9:7)

'நாம் இன்னும் பத்தில் ஒன்றையே காணிக்கையாகக் கொடுக்கவில்லையானால், நமது அடிப்படை கிறிஸ்தவ விசுவாசமே கேள்விக்குரியதாக அமைகிறது. அதேசமயம் பத்தில் ஒன்றைதான் கொடுக்கிறோம் என்றால், நாம் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணக் காலத்தை விட்டு, இன்னும் புதிய ஏற்பாட்டுக் கிருபையின் காலத்தில் பிரவேசித்து 'புதிய இஸ்ரவேலர்கள்' ஆகவில்லை என்பதாகப் பொருள்படும். நாம் தேவனுக்கு எதைக் கொடுக்கிறோம் என்பதை தேவன் பார்க்க மாட்டார். மாறாக, என்ன மனநிலையுடன் கொடுக்கிறோம் என்பதை மட்டுமே அவர் பார்க்கிறார். நாம் தேவனுக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்பதை தேவன் பார்க்க மாட்டார். மாறாக, நாம் கொடுக்காமல் எவ்வளவு நமக்கென வைத் திருக்கிறோம் என்பதைத்தான் அவர் பார்க்கிறார். நாம் யாருக்குக் கொடுக்கிறோம் என்பதை முழுமையாக உணர்ந்திருந்தால், நிச்சயம் அது நமது கொடுத்தலில் பிரதிபலிக்கும்,' என்று ஒரு தேவமனிதர் கூறுகிறார்.

'கொடுப்பது' என்பது நடைமுறையுடன் கூடிய ஒரு ஆராதனை முறைமையாகும். நாம் எவ்வித வரையறையுமின்றி உதாரத்துவமாகக் கொடுப்பது தேவனுக்கு சுகந்த வாசனையாக அமைகிறது. நம்மைப் பாதிக்காத எந்த ஒரு ஆராதனையும் உண்மையான ஆராதனையாகாது. அதனால்தான் தாவீது அரசன், 'நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தமாட்டேன்' (2சாமு.24:24) என்று கூறியிருப்பதைக் காணலாம். தேவனுக்கென்று உதாரத்துவமாக முழுமனதுடன் கொடுப்பது, நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பு மற்றும் விசுவாசத்திற்கும், நமது ஆவிக்குரிய முதிர்ச்சிக்கும் சான்றாகக் காணப்படுகிறது. நாம் தேவனுக்கென்று கொடுப்பது தசமபாகத்திலிருந்து ஆரம்பித்து, நாம் கிறிஸ்துவில் வளர வளர நமது அனைத்தையுமே முழுமையாக அவருக்குக் கொடுக்கிற நிலையை வந்தடைய வேண்டும். (2கொரி.8:7)

தேவப்பணியில் ஈடுபாடு காட்டுவதற்குக் 'கொடுப்பது' தவிர்க்க முடியாததாகும். 'கொடுப்பது' தேவ தூதர்களுக்குக்கூட கிடைக்காத ஒரு பாக்கியமும், அனைவருக்கும் கிடைக்காத ஒரு கிருபை வரமுமாகும். தேவனுக்கென்று கொடுப்பது விதையை விதைப்பதைப் போன்றது; அதன் பலனை நாமும் பிறரும் அடையலாம்.

மற்ற நாடுகளைவிட நமது தேசத்தில் கிறிஸ்துவை அறியாத ஜனங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றனர். ஆயினும் அதேசமயம், தற்போதைய கிறிஸ்தவ வட்டாரத்தில் 80%க்கும் மேற்பட்ட ஊழியங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியிலும், 90%க்கும் அதிகமான காணிக்கைகள் கிறிஸ்தவர்களுக்காகவே செலவிடப்படுவதையும் காணலாம். எனவே இக்காலக்கட்டத்தில் நமது நேரங்கள், தாலந்துகள் மற்றும் செல்வங்கள் யாவும் மிஷனெரிப்பணிக்கென தாராளமாகச் செலவிடப்பட முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஆம், "ஊருக்கொரு மிஷனெரி – பாருக்குள் அனுப்ப, ஆளுக்கொரு கை, ஆண்டவருக்கென்று வை!" என்று நமது முன்னோடி மிஷனெரித்தலைவர்களில் ஒருவரான எமில் ஜெபசிங் அண்ணன் அவர்கள் கூறியிருப்பதுபோல, ஒவ்வொருவரும் மிஷனெரிப் பணியில் ஈடுபடுவோம்; கொடுத்து வைத்தவர்களாவோம்!

- **JJ. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

"தேவப்பணியில் பங்கெடுப்பது என்பது, ஜனங்கள் மீது தேவன் கொண்டுள்ள அன்பின் இயக்கத்தில் பங்கேற்பதாகும்; ஏனெனில், தேவன் அன்பின் ஊற்றானவர்."- டேவிட் போஷ்

ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். (1 தீமோ.5:8)

"சமூகப் பொறுப்பு, கிறிஸ்தவ ஊழியத்தின் ஒரு அம்சம் மட்டுமல்ல; அது நமது ஆவிக்குரிய மனமாற்றத்தின் விளைவாகும். சக மனிதர்களிடம் நாம் நமது நல் மனமாற்றத்தைக் காட்டாமல், தேவனால் உண்மையான மாற்றம் பெற்றவர்களாவது கூடாத காரியம்." - ஜான் ஸ்டாட்

அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். (1 பேதுரு 4:10)

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும், இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தை பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுகாரியதரிசியிடமிருந்து...



கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

நமது இரட்சகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள ஈடுஇணையற்ற நாமத்தினாலே உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்!

புலம்பல் என்ற புத்தகம் அதன் பெயர் குறிப்பிடுவதுபோல் தேவஜனங்களின் துன்பத்தையும், துயரத்தையும் வெளிப்படுத்தும் புத்தகம் ஆகும். தேவன் பலமுறை எச்சரித்த போதிலும், தேவப்பிள்ளைகள் தேவனுக்குக் கீழ்ப்படியாது பாவத்தில் தொடர்ந்ததால் தேவன் அவர்களைத் தண்டித்தார். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் ஆரம்பத்தில் சந்திக்கும் துன்பங்கள் மற்றும் துயரத்தினூடே, புலம்பல் புத்தகத்தை முழுமையாகப் பார்க்கும் போது, தேவன் ஒரு தகப்பனாக தமது பிள்ளைகளுடன் கொண்டுள்ள உறவையும், ‘மாறாத தேவனாக’ அவர் ஒருவரே அவர்களது நம்பிக்கையாகவும் விசுவாசத்திற்குரியவராகவும் இருப்பதைப் பார்க்கலாம். ஆம், அவர் “சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை” (புலம்பல் 3:32,33). தேவனுடைய கிருபையையும், மாறாத அன்பையும் தியானிக்கும்போது, நமது இருதயம் நம்பிக்கையால் நிரம்பி வழிகின்றன.

## நமது இயக்கத்தின் தலைவர், உபதலைவர் மற்றும் பொருளாளரைத் தெரிவுச்செய்தல்:

கடந்த 2021 செப்டம்பர் 26-ம் தேதி சென்னையில் வைத்து நடந்த நமது இயக்கத்தின் பொதுக்குழுவில் தேவனின் பரமஞானம் மற்றும் கிருபையினால், தலைவர், உபதலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் ஏகமனதுடன் தெரிவுச்செய்யப்பட்டனர். சகோ. ரெஜினால்ட் அவர்கள் தலைவராகவும், சகோ. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்கள் உபதலைவராகவும் இரண்டாவது முறையாக வருகிற 3 ஆண்டுகளுக்கு தெரிவுச்செய்யப்பட்டனர். இவர்களின் ஞானமும், அனுபவமும் நமது இயக்கத்திற்கு தேவன் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்றுவதில் மேலும் புதிய எல்லைகளை அடைய உதவும்.

இருமுறை பொருளாளராகச் செயல்பட்டு வந்த சகோ.மணி சாமுவேல் அவர்களின் ஊழியப்பொறுப்புக் காலம் நிறைவடைந்ததால், நமது இயக்கத்தின் புதிய பொருளாளராகச் சகோ.L.நெல்சன் அவர்கள் தெரிவுச்செய்யப்பட்டுள்ளார்கள். இவர் நிதி மேலாண்மை துறையில் மிகவும் அறிவும் அனுபவமும் கொண்டவர். இவர் ஒரு பட்டயக்கணக்காளர் (Charted Accountant) மற்றும் ICWA (Institute of Cost and Works Accountants) பட்டங்களைப் பெற்றுள்ளதோடு, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்தின் நிதி மற்றும் கணக்குகளின் தலைமைப்பொதுமேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். புதிய பொருளாளரின் அறிவும், அனுபவமும் நமது இயக்கத்தின் நிதி அமைப்பை வலுப்படுத்த தேவனால் மிகவும் பயன்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன். புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று பொறுப்பாளர்களுக்கென சிறப்பு ஆராதனை, நமது ஊழியர்கள் மற்றும் ஜெபக்குழுத்தலைவர்கள் முன்னிலையில் நமது இயக்கத்தின் தலைமை செயலகம் - சென்னையில் வைத்து நடந்தேறியது. நமது இயக்கத்தின் தலைவர், உபதலைவர், பொருளாளர், பொதுச்செயலாளர் மற்றும் அனைத்துத் தலைமைச்செயலக ஊழியர்களுக்கும் தாங்கள் கிரமமாக ஏறெடுத்து

வரும் ஜெபம் மிகவும் அவசியமானதும், பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

மேலும், பொதுக்குழுவில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கென்று புதிய பொதுக்குழு அங்கத்தினர்கள் தெரிவுச்செய்யப்பட்டார்கள். நமது இயக்கத்தின் கொள்கை ரீதியான காரியங்களை நடைமுறைப்படுத்தும் பொதுக்குழுவிலுள்ள மூன்று அலுவலக ரீதியான பொறுப்பாளர்கள், பொதுச்செயலாளர் மற்றும் 20 உறுப்பினர்களுக்கும் தேவன் தமது ஞானத்தையும் வழிகாட்டுதலையும் நல்கத்தக்கதாக உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள்.

கடந்த 2021 செப்டம்பர் 25-ம் தேதி செயற்குழுவையும், அக்டோபர் 8,9-ம் தேதிகளில் நிர்வாகக்குழுவையும் நடத்த தேவன் உதவி செய்தார்.

## நடந்து முடிந்த முக்கியக்கூட்டங்கள்:

அமெரிக்காவில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் நமது இந்திய ஆதரவாளர்களுக்காக 2021 செப்டம்பர் 10-ம் தேதி இரண்டாவது வருடமாக இணையவழி மாநாடுகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளை அமெரிக்காவிலுள்ள நமது இயக்கத்தின் அமைப்பும், இங்குள்ள வெளிநாட்டுப்பிரிவும் கூட்டாக தயாரித்து வழங்கின. அமெரிக்காவிலுள்ள நமது இயக்கத்தின் அமைப்பு தனது 25-ம் வருடத்தை எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த அக்டோபர் 2-ம் தேதி தூத்துக்குடியில் வைத்து இளைஞர்களுக்காக ஒரு சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் சுமார் 250 இளைஞர்கள் கலந்து கொண்டனர். தேவன் அக்கூடுகையில் கலந்துகொண்ட இளைஞர்களின் இதயங்களில் கிரியை செய்து அவர்களை ஆசீர்வதித்தார்.

கேரளாவில் அம்பில்கோணம் பெத்தேல் ஜெப இல்லத்தில், நமது ஊழியத்தின் ஆதரவாளரும், ஜெபவீராங்கனையுமான ரோஸம்மா சன்னியாசினியின் நினைவாக 2021 அக்டோபர் 15-ம் தேதி நடத்தப்பட்ட கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். அந்த அம்மா தனது 14-ம் வயதிலிருந்தே தனது வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணித்து சன்னியாசினி வாழ்க்கை வாழ்ந்து, ஏராளமான மக்களைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரட்சிப்பிற்குள் வழிநடத்தியுள்ளார்கள். அந்த ஜெபக்கூடுகையில் கூடியிருந்த அனைவருக்கும் அவர்களது வாழ்க்கையும் ஊழியமும் ஒரு பெரிய சவாலாக அமைந்ததோடு, மேலும் தொடர்ந்து அநேகரை தேவப்பணிக்கென வழிநடத்தும் என நம்புகிறேன்.

அக்டோபர் 16-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நமது ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களை அவர்களது இல்லங்களிலும், ஒரு ஆதரவாளர் மற்றும் ஊழியரை வெவ்வேறு மருத்துவமனைகளிலும் சந்தித்தேன். கொரோனா தொற்றுநோயால் தங்களது அன்புக்குரியவர்களை இழந்த அனைத்துக் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கத்தாரிலுள்ள நமது ஆதரவாளர்கள் மற்றும் ஜெபக்குழு அங்கத்தினர்களுக்காக 2021 நவம்பர் 4-6-ம் தேதிகளில் ஒரு கூட்டம் இணையத்தின் வழியாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நமது இயக்கத்தின் தரிசனத்தை விரிவாக்கம் செய்வதற்கு தேவன் இக்கூடுகையைப் பயன்படுத்த ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சகோ. ஷியாம் சுந்தர் 2021 செப்டம்பர் 25-ம் தேதி மதமாற்ற தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்னும் ஜாமின் கிடைக்காமல் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார். எதிர்ப்பையும், ஒடுக்குமுறையையும் சந்தித்து வரும் நமது இளம் விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் தங்களது அழைப்பிலும், நம்பிக்கையிலும், அர்ப்பணிப்பிலும் உறுதியாக இருக்க ஜெபிப்போம்.

உங்களனைவரையும் எங்கள் ஜெபங்களில் தாங்குகிறோம்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**

# ஊழிய ஈடுபாடு நமது தலையாய கடமை!



'ஊழியத்தில் நமது ஈடுபாடு' என்கிற தலைப்பில் இரண்டு காரியங்களை நான் இங்கு விளக்க விரும்புகிறேன். அதாவது முதலாவதாக, கிறிஸ்தவ ஊழியத்தைப்பற்றி விரிவாக நாம் புரிந்து கொள்ள வேதாகமம் நமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன? இரண்டாவதாக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஊழியத்தில் விரும்பினால் ஈடுபடலாம் என்பதல்ல, அது நமது தலைமேல் விழுந்த கடமை என்பதை உணர்வதாகும்.

## I. கிறிஸ்தவ ஊழியம் என்றால் என்ன?

கிறிஸ்தவ ஊழியத்தை நாம் ஆராய்வதற்குமுன், தேவனின் ஊழியத்தை நாம் முதலாவதாகப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வுலகில் நமது பிரதான நோக்கமே, தேவப்பணியில் பங்கேற்பதாகும். தேவன் மனுக்குலத்தின் மீதும், அவருடைய எல்லாப் படைப்புகள் மீதும் கொண்டுள்ள நோக்கத்தையும் திட்டத்தையும் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இது மத்தேயு 28:18-20 மற்றும் எபேசியர் 1:3-10 - ம் வசனங்களில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. தேவனே ஊழியத்திற்கு ஆதாரமும், அதை ஆரம்பித்து வைத்தவருமாயிருக்கிறார். "நமது தேவன் ஒரு மிஷனெரி தெய்வம்; ஊழியம் தேவனுடையது, தேவப்பிள்ளைகள் தேவப்பணியில் ஈடுபட்டே ஆகவேண்டும் என்பது மறுக்கமுடியாத உண்மை" என டேவிட் போஷ் எனும் ஒரு மிஷனெரிப் பணியியலார் கூறுகிறார்.

பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 1:3-10-ம் வசனங்களில், தேவனின் நோக்கம் பாவத்தாலும் ஆக்கினையாலும் சிதைக்கப் பட்டிருந்த முழு உலகையும் இயேசு கிறிஸ்து தமது பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் அனைத்து தேசங்களிலுள்ள எல்லாமக்களையும் ஒரு புதிய சிருஷ்டியாக மாற்ற வேண்டும் என்பதாகும். கிறிஸ்துவின் தலைமையின் கீழ் வானிலும், பூமியிலுமுள்ள அனைத்தையும் தேவன் ஒன்றிணைத்து தமது நோக்கத்தின் இரகசியத்தை நமக்கு வெளிப்படுத்தினார். மத்தேயு 28:18-20ம் வசனங்களில், தேவவூழியத்தின் பிரதான கட்டளை மிகவும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இதுதான் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒட்டுமொத்த கிறிஸ்தவத்திற்கும் தேவனுடைய பிரதான கட்டளையாகும். இந்த மாபெரும் கட்டளை, இயேசுகிறிஸ்து அவரது அனைத்து படைப்புகளின் மீதும் தமது ஆளுகையைச் செய்யும்போது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நிறைவை அடைகிறது.

வேதப்பண்டிதர் கிறிஸ்டோபர் ரைட், இயேசுகிறிஸ்துவின் பிரதான கட்டளையிலுள்ள மூன்று முக்கிய காரியங்களைக் கோடிட்டுக் காட்டுகிறார்-

### 1. சுவிசேஷம் மற்றும் கற்பித்தலினால் திருச்சபையைக் கட்டுவது:

**(அ) சுவிசேஷம்:** இயேசுகிறிஸ்து மூலம் பிதாவினால் அருளப்பட்ட இரட்சிப்பின்

நற்செய்தியைப் பகர்ந்துக்கொளஎல். புதிய ஏற்பாட்டிலுள்ள பிரதான கட்டளையைப் பற்றி நாம் ஆராயும்போது மத்தேயு 28:18-20; மாற்கு 16:15-18; லூக்கா 24:46-49; யோவான் 20:21-23; அப்போஸ்தலர் 1:8-ன் மூலம் நாம் சுவி சேஷத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித் கூறியிருப்பது போல், "பிரதான கட்டளையை மைய மாகக் கொண்டு செயல்படாத எந்த தேவாலயமும், வாழ்வதற்கான வேதாக மத்தின் அங்கிகாரத்தை இழந்து விட்டது. உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிப்பது தேவசித்தமாக இருக்கும்போது, நாம் அப்பணியில் ஈடுபாடு காட்டாவிட்டால், நாம் தேவனின் சித்தத்தை எதிர்ப்பது போலாகும்."

டேவிட் லிவிங்ஸ்டன் என்கிற மிஷனெரி, "பூமியிலுள்ள ஒரு இராஜாவால் கொடுக்கப்பட்ட கட்டளை ஒரு கனம் பொருந்தியதாகக் கருதப்படும்போது, பரலோக ராஜாவின் கட்டளை எவ்வளவு ஒரு தியாகமானதாகக் கருதப்படும்!" என்று கூறுகிறார். ராபி கல்லட்டி எனும் தேவ மனிதர், "ஊழிய ஈடுபாடு – தேவாலயத்தில் மிகவும் வாஞ்சையோடு காணப்படுகிற ஒரு சிறுகூட்ட ஜனங்களுக்கானது அல்ல, முழுத்திருச்சபையின் நோக்கமே மிஷனெரிப்பணியில் நாம் யாவரும் ஈடுபடுவதுதான்" என்று கூறுகிறார்.

நான் 1984-ம் ஆண்டு நமது இயக்கத் தின் ஒரு மிஷனெரிக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது, தேவன் என்னை இந்தப் 'பிரதான கட்டளையைப்' பெற்று, அதற்குக் கீழ்ப்படிய வழிநடத்தினார். அதன் விளைவாக, நானும், எனது மனைவியும் மால்தோ மக்களுக்கு நற்செய்தியைப் பகர்ந்துகொள்ளும் பாக்கியத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றோம். ஆம், பவுல் அப்போஸ்தலன் கூறுவதுபோல், நாம் ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொள்வதால், உலகத்திலே சுடர்களை போலப் பிரகாசிக்கலாம் (பிலி.2:14).

**ஆ. கற்பித்தல் –** நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத்.28:20).

கற்பித்தல், ஊழியத்தோடு ஒன்றிணைந்த ஓர் அம்சமாகும். புதிய இளம் விசுவாசிகள் கிறிஸ்துவில் வளர்ச்சியையும் முழுமை யையும் அடைய நாம் அவர்களை வழிநடத்த வேண்டும். இதற்கு இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில், இயேசுகிறிஸ்து தமது மூன்றரையாண்டுக்கால ஊழியத்தின் போது, அவருடைய சீஷர்களுக்குக் கற்பிப்பதில் அதிக நேரம் செலவிட்டார். ஆதிகால திருச்சபைகளிலுள்ள இளம் விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர்கள் கற்பித்ததையும், இளம் விசுவாசிகள் அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் உறுதி யாய்த் தரித்திருந்ததையும் அறிகிறோம் (அப்.2:42).

"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசு வுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" (கொலோ. 1:28) என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையைக் கட்டியெழுப்புவதில் ஒவ்வொரு அங்கங்களாகிய நாம் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்து வதன் முக்கியத்துவத்தைப் பவுல் வலியுறுத்துகிறார் (எபே.4:11-16). இவ்விஷயத்தில் நாம் தோல்வியடைந்தால்,

திருச்சபை வளர்ச்சியடையாமல் குழந்தைப் பருவ நிலையில்தான் காணப்படும். (அப்.20:29-31). தேவஜனங்களில் எல்லா வயதினரும் வேதாகம சத்தியத்தை முறையாகக் கற்றுத்தேறுவதற்கு விசுவாசிகளாக நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

### 2. சமுதாயப்பணியாற்றல்:

இயேசு தாம் கட்டளையிட்ட அனைத்தையும் நாம் கற்பிக்க வேண்டும் என்று தனது பிரதான கட்டளையில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது போதனைகளில் இரக்கத்தையும், நீதியையும் கூறியிருப்பதை அறியலாம். ''நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' (மத்.5:6) என்று இயேசு கூறுகிறார். மேலும், அவரது கட்டளையின் மிக முக்கிய விஷயங்களான இரக்கத்தையும், நீதியையும் பரிசேயர்கள் புறக்கணித்ததற்காக அவர் அவர்களைக் கண்டிப்பதைக் காணலாம். மத்தேயு 25:31-46-ல் நாம் எவ்வாறு இரக்கத்துடன் சமுதாயப்பணியாற்ற வேண்டுமென வலியுறுத்திக் கூறியிருப்பதை அறியலாம். நாம் தேவனுடைய குணாதிசயங்களை நமது வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார் (உபா.10:12-19; எபே..5:1).

வேதாகமம் தெளிவாகக் கூறியிருப்பது போல், கிறிஸ்துவின் சித்தத்திற்குட்பட்டு இவ்வுலகில் சுவிசேஷத்தை மையமாகக் கொண்ட கிறிஸ்தவ சமூக ஈடுபாடு கிறிஸ்தவ ஊழியத்தின் தவிர்க்க முடியாத பரிமாணம் என்று வேதப்பண்டிதர் கிறிஸ்டோபர் ரைட் கூறுகிறார்.

### 3. சிருஷ்டிகளைப் பராமரித்தல் - தேவனுடைய படைப்பின் வளங்களைக் காப்பதில் தெய்வீக உக்கிராணத்துவம்:

ஆதியாகமம் 1:28,29-ம் வசனங்களில், ஆதாமும் ஏவாளும் நல்ல உக்கிராணத்துவம் நிறைந்தவர்களாகப் பூமியைப் பண்படுத்தி பேணிகாத்து ஆண்டு கொள்ள வேண்டுமென தேவன் வலியுறுத்தினார். தேவனுடைய பிள்ளைகளாக நாமும் அவ்வாறாக பூமியைப் பாதுகாத்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம். ஏனெனில், இயேசு தமது பிரதான கட்டளையில் ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.'' என்று கூறியிருப்பதைக் காணலாம். இயேசுகிறிஸ்து பூமிக்கு ஆண்டவராக இருப்பதால், நாமும் பூமியைப் பாதுகாப்பதில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்டிருப்பதையும், நாம் பூமிமீது அக்கறை காட்டுவதையும் எள்ளளவும் பிரிக்கவே முடியாது. ஆகவே, கிறிஸ்துவின் பிரதானக் கட்டளையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவவூழியம் மிகவும் பரந்த பரிமாணத்தைக் கொண்டதாகக் காணப்படுவதை அறிகிறோம். அதை நிறைவேற்றுவதில், நாம் தேவனின் உடன் ஊழியர்களாகச் செயல்பட வேண்டும்.

## II. தேவவூழியத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஈடுபாடும் ஒரு தலையாய கடமை:

1974-ம் ஆண்டில் சுவிட்சர்லாந்தில் லூசானாவில் 'உலகத்திற்கு நற்செய்தி' என்கிற தலைப்பில் நடந்த சர்வதேச மாநாட்டில், அதில் கலந்துகொண்ட 150 நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களையும் ஒன்றிணைத்து ஒரு ஒப்பந்தம் கீழ்க்கண்டவாறு நிறைவேற்றப்பட்டது

''இயேசுகிறிஸ்துவின் திருச்சபை

உறுப்பினர்களாகிய நாங்கள், கிறிஸ்துவின் சுவிசேஷம் – உலகமெங்கிலுமுள்ள அனைத்து மக்களுக்கான நற்செய்தி என்று நம்புகிறோம். மேலும், அதை அனைவருக்கும் அறிவித்து அவர்களைக் கிறிஸ்துவின் சீடர்களாக்கவும் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியச் செய்யவும் தேவனுடைய கிருபையால் நாங்கள் உறுதி கொள்கிறோம்."

எனவே, ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவ வூழியத்தில் ஈடுபட கடமைப்பட்டிருக்கிறார்கள். ஊழியத்தை விரும்பினால் செய்வோம் என்பதற்கு அதில் இடமில்லை, அது நம் தலைமேல் விழுந்த கடமை. அதைச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் அளவிடப்படமுடியாத வல்லமையை நமக்கு நல்கியுள்ளார் (அப்.1:8). அதோடு தேவப்பணியில் ஈடுபடுவோருக்கு மட்டுமே "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடே இருக்கிறேன்'' (மத்.28:20) என்கிற மிகச்சிறப்பான வாக்குத்தத்தம் உரித்ததாக அமைகிறது.

இது குறித்து, ரான் போஹ்மே என்கிற ஒரு தேவமனிதர் கீழ்வருமாறு கூறுகிறார்–

"ஒவ்வொரு விசுவாசியும் மிஷனெரிப் பணியில் ஈடுபடும்போது, நவீன மிஷனெரி யுகத்தின் 'நான்காவது அலை,' புதுமையான தொழில் நுட்பங்கள் மற்றும் தகவல் தொடர்புகளைப் பயன்படுத்துகிற வாழ்வின் அனைத்து அம்சங்களையும், அனைத்து வயதினரையும், தேசமக்களையும் உள்ளடக்குகிற ஒன்றாகக் காணப்படும்."

இக்காலங்களில், உலகமெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களை தேவன் தேசங்களின் எழுப்புதலுக்காக ஜெபிக்க எழுப்பி வருவதினால், ஒரு பெரிய ஆவிக்குரிய மறுமலர்ச்சி உருவாகி வருவது நமக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது. ஆம், "தேவன் தமது ஜனங்களுடன் ஏதாவது புதிதாகச் செய்யத் தயாராக இருக்கும்போதெல்லாம், அவர் அவர்களை ஜெபிக்க வைக்கிறார்" என எட்வின்.R என்கிற வேதப்பண்டிதர் குறிப்பிடுகிறார்.

எனவே, நமது தேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கான தேவவூழியம் மற்றும் ஜெபத்தில் தீவிரமாக ஈடுபட தேவன் நம்மை வழிநடத்துவாராக.

**அருள்திரு. சார்லஸ் செல்ல குமார்,**
FMPB – செயலாளர்,
போதக கரிசனை ஊழியம்.

## மகிமைக்குள் பிரவேசித்தார்



சகோ. சுந்தர் அவர்கள், தனது 62–வது வயதில் கடந்த 2021 செப்டம்பர் 9–ம் தேதி மகிமைக்குள் பிரவேசித்தார்கள். அசோக் லேய்லேண்ட் கம்பெனியில் வேலை செய்து வந்த இவர், ஓசூரை மையமாக வைத்து கடந்த 25 ஆண்டுகளாகக் கௌரவ விரிவுப்பணி செயலராகப் பணியாற்றி வந்தார். மற்றும் தர்மபுரி மாவட்டத்திற்கு அருகிலுள்ள நமது பணித்தளங்களை விஜயம் செய்து நமது ஊழியர்களையும், ஊழியங்களையும் அடிக்கடி ஊக்குவித்து வந்தார். இவருடைய பிரிவால் வாடும் இவரது மனைவி திருமதி. ராணி சுந்தர், மகன் திரு. டேனியல் பிரின்ஸ் மற்றும் மகள் திருமதி. பிரின்சி குடும்பத்தாரை நமது ஜெபத்தால் தாங்கிக்கொள்வோம்.

# மிஷனெரிப்பணியில் ஈடுபடுத்துவதில் செயல்வீரர், **சகோ. T. துரைசிங்** *அண்ணன் அவர்கள்!*

தேவ ஒத்தாசையால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தை இன்று ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ விசுவாசிகள் ஜெபத்தாலும் பொருளாலும் தாங்கி வருகிறார்கள் என்றால், அதற்கு இவ்வமைப்பின் முன்னோடி தலைவர்களான சகோ. பி. சாமுவேல், சகோ. எமில் ஜெபசிங், சகோ. பேட்ரிக் ஜாஷ்வா, சகோ. சைமன் ராபர்ட்ஸ், அருள்திரு. கே. எஸ். ஆபிரகாம், சகோ. துரைசிங் மற்றும் அநேகருடைய பங்கு இதில் மிகவும் பெரியது என்பதை நாம் நன்கு அறிவோம். இவர்கள் கிறிஸ்தவ வெகுஜனங்களைத் தங்களது வாழ்க்கை, சாட்சி மற்றும் செய்தியினால் தட்டியெழுப்பி மிஷனெரிப்பணியில் ஊக்குவித்த பாங்கு, இந்தியத் திருச்சபையில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு கிறிஸ்தவர்களை மிஷனெரிப்பணியில் ஈடுபடுத்துவதில் ஒரு முக்கியமான பங்கு வகித்தவர்தான், சகோ. துரைசிங் அண்ணன் அவர்கள். இவர் விட்டுச்சென்ற இவ்வூழிய மரபு இன்றும் இளைய தலைமுறையினருக்குச் சிம்ம சொப்பனமாகவும், அவசியம் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளாகவும் காணப்படுகிறது.



சகோ. துரைசிங் அண்ணன் அவர்கள் தேவஅழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, 1975-ம் ஆண்டு தனது அரசாங்க ஆசிரியப்பணியை ராஜினாமா செய்துவிட்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னோடி விரிவுப்பணி செயலாளராகவும், பின்னர் தேசிய விரிவுப்பணி இயக்குனராகவும் செயல்பட்டு வந்தார்கள். இவர் இவ்வியக்கத்தின் விரிவுப்பணியில் தேவகிருபையால் ஒரு வரலாற்று சாதனையே படைத்தார் என்றால் அது மிகையாகாது. இந்தியத் திருச்சபைகள் மிஷனெரிப்பணியின் அவசியத்தை அதிகம் அறியாமல், தங்களது சொந்த ஊழியங்களிலேயே மிகவும் ஈடுபட்டு வந்த காலக்கட்டங்களில், அத் திருச்சபைகளில் திருச்சபைக்கு வெளியே கிறிஸ்துவை அறியாத கோடிக்கணக்கான மக்களைக் குறித்த தரிசனத்தினால் மாபெரும் தாக்கத்தை இவர் ஏற்படுத்தினார். இவரது வாழ்க்கையும், செய்தியும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ விசுவாசிகளை மிஷனெரிப்பணிக்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் வழிநடத்தியது.

சகோ. துரைசிங் அண்ணன் செய்தியில் எப்பொழுதும் இருவிதமான அர்ப்பணிப்பிற்கு வழிநடத்தும் அழைப்புகள் இடம் பெற்றிருந்தன. அதாவது – 1. பாவத்தை அறிக்கை செய்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வது. 2. மிஷனெரிப்பணியில் தீவிரமாக ஈடுபாடு காட்ட அர்ப்பணிப்பது. இவர் எப்பொழுதும் மிஷனெரிப்பணிக்கான ஜெபம் மற்றும் பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்வதில் அதிகம் முனைப்புக் காட்டினார். இப்பணி மிகவும் கடினமானதாகவும், சவால் நிறைந்ததாகவும் காணப்பட்டாலும், இவரது தணியாத மிஷனெரித்தாகமும், அர்ப்பணிப்பும் இவ்வூழியத்தில் ஏராளமான மைல் கற்களை எட்டிப்பிடித்தது. இவர் மிஷனெரிப்பணியின் மாபெரும் தேவையை மக்களிடம் பகர்ந்து கொண்டு, அதன் தேவையில் மக்களை ஈடுபடுத்துவதைக் குறித்து சற்றுக்கூட வெட்கமோ, தயக்கமோ காட்டியதில்லை. இவ்வியக்கத்தின் அனைத்துக் கூட்டங்களிலும் குறிப்பாக, அறைகூவல் கூட்டங்கள், கிதியோனியர் முகாம், மாநில முகாம்களில்

‘செயல்படும் நேரங்களை’ நடத்தி அக்கூடுகைகளில் கலந்துகொள்ளும் மக்களைப் பெருமளவிற்கு மிஷனெரிப்பணிக்கான செயலாக்கத்திற்கு வழிநடத்தினார். இவரது ஊழியத்தாக்கத்தை உணர்ந்து அநேகர் தங்கள் நகைகள் மற்றும் சொத்துக்களைக்கூட தியாகத்துடன் மிஷனெரிப்பணிக்காகக் கொடுத்தனர். இவரது மூச்சிலும், பேச்சிலும், சிந்தையிலும், செயல்பாட்டிலும் விசுவாசிகளை மிஷனெரிப்பணிக்கென ஈடுபடுத்தும் அசைக்கமுடியாத வாஞ்சை காணப்பட்டது. மிஷனெரிப்பணித்தள திட்டத்தேவைகளை முறையாக அறிமுகப்படுத்தி, மக்களைக் கிரமமாக அதில் ஈடுபாடு காட்ட இவர் வழிநடத்தினார்.

மிஷனெரிப்பணியில் கிறிஸ்தவ வெகு ஜனங்களைத் தட்டியெழுப்பும் மாபெரும் ஊழியத்தை இவரில் நேரில் கண்ட இளைஞர்கள், இவ்வுன்னதப்பணிக்கு தங்களையும் கையளித்து, அவரோடு இணைந்து செயல்பட்டனர். இவர் அவர்களுக்குச் சிறப்பாகப் பயிற்சியளித்து, இப்பணியில் மிகவும் தீவிரமாக ஈடுபட வழிவகுத்தார். அவர்கள் ஜெபம் மற்றும் பொருளாதார ஆதரவுகளைச் சிறப்பாகவும் தீர்க்கமாகவும் செய்வதற்கு இலக்குகளை நிர்ணயித்து அவர்களைச் செயலாக்கத்திற்கு வழிநடத்தினார். இவரும் இப்பணியில் எப்போதும் இலக்குகளை நிர்ணயித்தே செயல்பட்டு வந்தார். இவர் இவ்வூழியத்தோடு தொடர்புடைய குடும்பங்களில் நிகழும் திருமணம், வீடு பிரதிஷ்டை மற்றும் பிற வைபவங்களில் கூட தனக்குப் பேசக்கிடைக்கும் வாய்ப்புகளில், அங்கு கலந்து கொள்பவர்களை மிஷனெரிப்பணியில் ஈடுபட அழைப்புக்கொடுத்தது, அவருக்கு இப்பணியில் காணப்பட்ட தீராத தாகத்தையும், தரிசனத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

தேவகிருபையால் இன்றைய நாட்களில் நமது இயக்கத்தில் தேசமெங்கும் கிறிஸ்தவ வெகுஜனங்களை மிஷனெரி ஊழியத்தில் ஈடுபடுத்தும் பணியில் நூற்றுக்கணக்கான விரிவுப்பணி செயலாளர்களும், கௌரவ விரிவுப்பணி செயலாளர்களும், ஜெபக்குழுத்தலைவர்களும் இக்காலங்களில் வருகிறார்கள் என்றால், அதில் சகோ. துரைசிங் அண்ணனுடைய வழிகாட்டுதல் மற்றும் ஊழிய மரபு அதிகம் காணப்படுகிறது என்பது தான் நிதர்சனம்.. இந்தியாவின் மூலை முடுக்குகளிளெல்லாம் ‘மிஷனெரி தரிசனம்’ விரிவாக்கம் செய்யப்பட்டு, தேவஜனங்கள் இன்று பெருமளவில் மிஷனெரிப்பணியில் ஈடுபட்டு வருவது தேவனுக்கு மிகவும் மகிமை சேர்ப்பதோடு, சுகந்த வாசனையாகவும் அமைகிறது. அருமையான சகோ. துரைசிங் அண்ணனுடைய அழகிய வாழ்விற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு, அனைத்துக் கிறிஸ்தவர்களையும் ‘மிஷனெரிக் கிறிஸ்தவர்களாக’ மாற்றுவதே, நாம் அவர்கள் விட்டுச்சென்ற ஊழியமரபைப் பின்பற்றுவதற்கான சான்றாக அமையும்.

*வெற்றியே தரும் ஆண்டவருக்கு, நம்மைக் காணிக்கையாக்கிடுவோம்;*

*உடல், பொருள் யாவும் இயேசுவுக்கே, காணிக்கையாக்கிடுவோம்!*

*தேசம் இயேசுவைக் கண்டு விடும்; சபைகள் ஏராளம் பெருகி விடும்!*

*சத்தம் கேட்டு சித்தம் செய்ய அழைக்கிறாரே! – இயேசு*

என்று சகோ. துரைசிங் அண்ணன் அடிக்கடி பாடுகிற பாடல் இன்றும் நமது சிந்தையில் ஒலித்து, நம்மை தேவப்பணியில் ஈடுபாடு கொள்ள அறைகூவல் விடுக்கிறதன்றோ?

# தேவப்பணியில் ஈடுபட ஓர் அழைப்பு!



தேவ ஊழியத்தில் ஈடுபடுவது, இயேசு வின் மாதிரியைப் பின்பற்றி அவரோடு இணைந்து அவரின் வாழ்க்கையை நமது வாழ்வில் அப்பியாசப்படுத்துவதாகும். தேவப்பணி ஈடுபாடு என்பது, ஒட்டு மொத்தமாக கிறிஸ்துவைப் பற்றிய தாகும். தேவன் ஏற்கனவே இவ்வுலகில் செயலாக்கம் செய்து கொண்டிருக்கிறார். அதை அவரே தொடர்ந்து முழுவதுமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் அதை விரும்பவில்லை; அவர் தனது நோக்கத்தை இவ்வுலகில் நம்மிலும், நம்மாலும் செயலாக்கம் செய்வதையே விரும்புகிறார். அவர் தமது தேவராஜ்ய கட்டுமானப்பணிக்காகப் பயன்படுத்திய மனிதர்கள் ஏராளம், ஏராளம். அப்பெயர்ப் பட்டியலில் நம்மை யும் இணைத்து அவரது உன்னத மான பணியில் ஈடுபடுத்த தேவன் விரும்புகிறார். தேவதூதர்கள் விரும்பி யும் அவர்களுக்குக்கூட கொடுக்கப் படாத பணியை, பவுல் போன்ற பரிசுத்தவான்கள் செய்த மாபெரும் உச்சிதமான பணியை தேவன் நம் கையில் மிகவும் பெரிய எதிர்பார்ப்போடு கொடுக்க விரும்புகிறார்.

மிஷனெரிப்பணியில் ஈடுபாடு என்பது ஏதோ தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசிகளும் ஏதாவது ஒருவகையில் இப்பணியில் ஈடுபடவேண்டும். 'அனைத்துத் திருச்சபையினரும் அனைத்துலக மக்களுக்கும் முழுமை யாகச் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல வேண்டுமென்பதே' தேவனது திருவுளச் சித்தம். ஆனால், பெரும்பாலான திருச்சபைகளும் விசுவாசிகளும் தேவப் பணியில் ஈடுபடவில்லை என்பது மிகவும் துக்ககரமான செய்தியாகும். கிறிஸ்துவின் நற்செய்தி இவ்வுலகை எட்டி 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் 50% இந்தியர்கள் தேவப் பணியில் எவ்வித ஈடுபாடுமின்றிக் காணப்படுகின்றனர்.

"பெரும்பாலான ஊழியங்கள், 'சுவி சேஷம் அறிவிக்கப்பட்டவர்களுக்கே, மீண்டும் அறிவிப்பதிலும், மன மாற்றம் அடைந்தவர்களையே மீண்டும் மனமாற்றமடையச் செய்வதிலும், ஆறுத லடைந்தவர்களையே மீண்டும் ஆறுதல் படுத்துவதிலும், அதேசமயம் சுவிசேஷம் அறிவிக்கப்படாத மக்களை மென் மேலும் அறியப்படாதவர்களாகவே வைப்பதிலுமே' பெரும்பாலும் ஈடுபட்டு வருகின்றன" என்று டேவிட் பாரெட் எனும் மிஷனெரியியலார் தனது ஆராய்ச்சியின் அடிப்படையில் கூறு கிறார். நாம் ஆண்டவருக்கென்று கொடுக்கிற காணிக்கைகளில் 94% கிறிஸ்தவர்களுக்காகவும், 5.5% ஏற்கனவே சுவிசேஷத்தைக் கேட்டும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்

களுக்காகவும், 0.5% மட்டுமே வாழ்வில் ஒருமுறையேனும் இயேசு என்கிற வார்த்தையையே கேள்விப்பட்டிராத மக்கள் மத்தியிலும் செலவிடப்படுகிறது. இந்தியாவில் சுமார் 10,000 மக்களால் பேசப்படுகிற 219 மொழிகளில், 74 மொழிகளில்தான் முழு வேதாகமமும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன. புதிய ஏற்பாடு மேலும் 75 மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளன.

இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்ட அனைவரையும், தேவப் பணியில் ஈடுபட தேவன் அழைக்கிறார். இவ்வழைப்பை மறந்துபோனவர்களை ஞாபகப்படுத்துவதற்காக தேவ அழைப்பு தொடர்ந்து வந்துக் கொண்டேயிருக்கிறது. வால்டர் ப்ரூக் மேன் என்கிற இறையியலார் மிஷனெரிப் பணிக்குறித்த அவருடைய புத்தகத்தில், இஸ்ரவேல் என்கிற தேசமே தனது ஊழிய அழைப்பை மறந்துவிட்ட காலக்கட்டத்தில், தேவன் அவைகளை ஞாபகப்படுத்திக்கொள்வதற்காக மீண்டும் மீண்டும் அழைப்பு விடுப்பதைப் பார்க்கிறோம். அதுபோல இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு ஊழிய அழைப்பு தெளிவாகக் காணப்பட்டாலும், பழைய இஸ்ரவேலர்களுக்கு அடிக்கடி அது ஞாபகப்படுத்தப்பட்டதுபோல, புதிய இஸ்ரவேலர்களாகிய நமக்கும் அவ்வழைப்பு அடிக்கடி கொடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. நாம், ‘ஆம்’ என்று அவ்வழைப்பிற்கு இணக்கம் தெரிவிக்கும்போது, தேவன் அருளும் நித்திய மகிழ்ச்சி நம்மில் பரிபூரணப்படுகிறது.

தேவன் நம்மை இரட்சித்திருந்தால், நாம் ஏதாவது ஒருவகையில் அவருடைய ஊழியத்தில் ஈடுபடுவோம். இயேசு சொன்னதுபோல், “மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்’’ (மாற்கு 10:45). நாம் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற வேண்டுமாயின், அவரைப் போல் ஊழியம் செய்ய வேண்டும். பலருக்கு இன்னும் நற்செய்தி சென்றடையாததற்குக் காரணம், தேவப்பிள்ளைகள் யாவரும் இம்மாபெரும் உன்னதப்பணியில் ஈடுபடாததுதான். நாம் தேவப்பணி செய்வதை நமது வாழ்வில் நடைமுறைப் படுத்தாவிட்டால், சுவிசேஷம் பரவச் செய்வதில் தோல்வியடைந்து, தேவநாம மகிமைக்காக நம்மால் முடிந்ததைக்கூட செய்யமுடியாத நிலையை எட்டுவோம் என்பதை உணரவேண்டும்.

## நமது சிந்தனைக்கான கேள்விகள்:

- எனக்கு தேவனிடமிருந்து கிடைத்த பிரதான மற்றும் முதன்மையான அழைப்பிலிருந்து வழிவிலகு கிறேனா? (அப்.6:1-4)
- நான் எனது விசுவாசத்தைச் செயலாக்கம் செய்வதில் தயக்கம் காட்டுகிறேனா? (எபி.11:8)
- நான் முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தைத் தேடி, எனது வாழ்வின் சூழலில் தேவ அழைப் பிற்கு இணங்கி நற்செய்தி பரவலில் பங்கேற்கிறேனா?
- தேவப்பணிக்கு என்னிடம் கீழ்ப்படியாமை காணப்பட்டால் அதை நான் எவ்விதம் தவிர்க் கலாம்? (யோனா 1:1-3; 4:2)

- தேவப்பணியில் நான் ஈடுபாடு காட்டுவதற்கு எனது சுயம் தடையாக அமைந்துள்ளதா? (எஸ்.4:13-16)
- நான் எனது சொந்த அலுவல்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கிறேனா? (ஆப.1:15-16)
- நான் தேவப்பணியை எனது உள்ளார்ந்த அளவில் விரும்புகிறேனா?
- நான் தேவப்பணியில் ஈடுபடுவதில் காலம் தாழ்த்து கிறேனா? (ஆகாய் 1:2-5)
- ஆத்தும ஆதாயப்பணியில் எனக்கு மந்தநிலை காணப் படுகிறதா? (நெகே.1:15)
- சுவிசேஷப்பணி மற்றும் கிறிஸ்து வின் பிரதான கட்டளை மீது எனக்கு ஆர்வம் காணப்படுகிறதா?
- எனது நேரங்கள், தாலந்துகள் மற்றும் செல்வத்தை எனது விருப்பப்படி செலவிடுகிறேனா அல்லது அதை தேவனின் கொடையாக உணர்ந்து அவர் நாம மகிமைக்காகச் செலவிடுகிறேனா? (வெளி.22:10-20)
- எனக்குப்போக மீதமுள்ளதை மட்டும் தேவனுக்குக் கொடுக்கிறேனா? (மல்.1:7-8, 12-14)
- நான் பணத்தைச் செலவு பண்ணும்போது, ஏழைகள் மற்றும் திக்கற்றவர்களைக் கருத்தில் கொள்கிறேனா?
- பிறரை உருவாக்குவதில், கட்டியெழுப்புவதில் நான் தயக்கம் காட்டுகிறேனா? (பிலே.15-18)
- தேவன் அருளிய ஆசீர்வாதங் களில் நான் ஒரு நல்ல உக்கிராணக் காரனாக இருக்கிறேனா?

UPI Accepted Here

ICICI Bank iMobile BHIM

Merchant Name M/S.FRIENDS MISSIONARY PRAYER BAND

Mobile Number 9444396217

Steps to Pay
Open UPI app > Select 'Tap to Pay' > Scan QR Code > Enter Amount

## காணிக்கை அனுப்புவதற்கு

# பார்கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் கீழ்காணப்படும் பார்கோடு வசதியையும் தேவையானால் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**



# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திருமதி. S. பாக்கியமுத்து சுவாமிநாதன் (வயது 94) அவர்கள், கடந்த 22.09. 2020 அன்று கர்த்தரு டைய இளைப்பாறுதலுக் குள் பிரவேசித்தார்கள். இவர்கள் FMPB திட்டுவிளை பணி மாவட்டத்திற்குட்பட்ட தாழக்குடி கிராமத் தில் ஒரு ஜெபக்குழுவை ஆரம்பித்து அநேகரை ஜெபிக்க உற்சாகப் படுத்தினதோடு, மிஷனெரிப்பணிக்காகக் காணிக்கைகளையும் சேகரித்து அனுப்பி வந்தார்கள். முதிர்வயதிலும் மிஷனெரிப் பணிக்காக ஆத்துமபாரத்தோடு ஜெபித்தவர்கள். இவரை இழந்து வாடும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.



நாகர்கோவில் ரூரல் பணி மாவட்டம், களியங்காடு பரமேஸ்வரன் தெருவைச் சேர்ந்த திரு. C. ராஜ ரத்தினம் அவர்கள், கடந்த 18.12.2020 அன்று கர்த்த ருடைய நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர்கள் குடும்பமாக 2 மிஷனெரிகளையும் 8 குழந்தை களையும் தாங்கி வருகிறார்கள். இவருடைய மனைவி திருமதி. ஜோதி ராஜரத்தினம் அவர்கள் ஊழியத்திற்காகப் பாரத்துடன் ஜெபிப்பவர்கள். மாதந்தோறும் தனது ஜெபக்குழுவினரின் காணிக்கைகளைப் பிரித்து அனுப்புகிறார்கள். திரு. C. ராஜ ரத்தினம் அவர்களின் பிரிவினால் துயரத்திலிருக்கும் அவருடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



நாகர்கோவில் பணி மாவட்டம், சத்தியநேசன் தெருவைச் சேர்ந்த திருமதி. ஜரின் சுகந்தி சுரேஷ் அவர்கள், கடந்த 27.05.2021 அன்று கர்த்தருடைய நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் ஒரு மிஷனெரி ஆதரவாளர்; ஊழியத்திற்காகப் பாரத் துடன் ஜெபித்தவர். இவருடைய பிரிவினால் துயரத்திலிருக்கும் இவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



ரெட்ஹில்ஸ், காரனோடை பகுதி ஜெபக் குழுத்தலைவியும் காலஞ்சென்ற பாசத் திற்குரிய திரு. T. ஞான துரை (நமது இயக்கம் காரனோடை பகுதியில் வளர வித்திட்ட வர்கள்) அவர்களின் மனைவியுமான திருமதி. T. ஜெபசீலி லைசா அவர்கள், கடந்த 17.09.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்கள் தனது கணவர் விட்டுச்சென்ற ஜெபக்குழுவின் தலைமைப்பொறுப்பினைக் கடந்த 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து உற்சாகமாய் எடுத்து செய்து வந்தார்கள். இவர்களுக் காகக் கர்த்தரைத் துதிக்கிறோம். இவர் களின் பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகள் யாவரையும் கர்த்தர் தாமே ஆறுதல்படுத்த ஜெபிப்போம்.

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2021**

| RECEIPTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. | PAYMENTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| **Foreign Contribution Account:** | | | **Foreign Contribution Account:** | | |
| To Bank Interest | 16,85,406 | **12,46,023** | **Programme Expenses:** | | |
| To Donation Calamity Relief | - | **32,88,211** | By Calamity Relief Expenses | - | **2,71,600** |
| To Donation children home maintenance | 70,99,007 | **74,89,768** | By Children Education Expenses | 30,62,634 | - |
| To Donation Christmas Gift | 2,52,450 | **9,14,915** | By Children HR Study Scholarship Exp | 6,41,830 | - |
| To Donation - Church Expenses | 12,94,964 | **36,93,060** | By Community Dev Child Care Expenses | 3,53,067 | |
| To Donation - Community Dev. Camps | 26,72,187 | **1,40,14,890** | By Community Dev Educational Expenses | 1,13,800 | - |
| To Donation Community Dev - Child Care | 10,43,226 | **27,60,138** | By Community Dev Project Medical Care | 36,73,556 | **24,01,400** |
| To Donation Community Dev - Education | 31,463 | - | By Church Expenses Support | 9,20,987 | - |
| To Donation General | 6,03,994 | **5,81,897** | **Administration Expenses:** | | |
| To Donation HR Study Scholarship | 1,81,705 | **3,81,024** | By Bank Charges | 16,209 | **12,178** |
| To Donation Medical | 24,46,656 | **85,86,728** | By Christmas Gift | 1,87,500 | **1,09,000** |
| To Donation - Monthly Pledge | 62,76,634 | **90,94,677** | By General, Hospitality & Maintenance | 1,58,283 | - |
| To Donation - Vocational Training | 18,736 | **18,389** | By Salary & Allowances | 29,25,349 | **46,19,316** |
| **Local Contribution Account:** | | | By Staff Medical Expenses | 25,10,204 | **4,48,131** |
| To Bank Interest | 1,40,30,815 | **2,50,78,304** | **Local Contribution Account:** | | |
| To Interest on Income Tax Refund | - | **52,818** | **Programme Expenses:** | | |
| To Donation - Annual Meet | 52,35,059 | **2,08,390** | By Calamity Relief Expenses | - | **13,62,035** |
| To Donation - Calamity Releif | 6,000 | **20,62,226** | By Children Education Expenses | 1,73,02,544 | **77,25,668** |
| To Donation - Children Home Maintenance | 1,58,30,720 | **54,81,919** | By Children HR Study Scholarship Exp | - | **44,57,873** |
| To Donation - Christmas Gift | 3,45,58,277 | **3,34,39,703** | By Church Expenses Support | 4,47,46,580 | **3,11,80,651** |
| To Donation - Church Expenses | 4,14,89,772 | **4,90,37,913** | By Community Dev Camp Expenses | | |
| To Donation Community Dev - Camp | 1,50,10,724 | **83,90,846** | Training & Development | 62,66,104 | **22,29,757** |
| To Donation Community Dev - Child Care | 14,39,73,880 | **14,84,06,048** | Community Dev. Camp Expenses | 1,15,89,228 | **3,98,35,807** |
| To Donation - Community Dev. Education | 30,26,556 | **44,70,091** | Linguistic Work | 4,59,955 | **74,218** |
| To Donation - Community Dev. Health Care | 42,200 | **24,810** | By Community Development Expenses | | |
| To Donation Field Equipment | 12,39,025 | **10,26,341** | Community Dev. Project Medical Care | 22,53,299 | **19,85,163** |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2021**

| RECEIPTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. | PAYMENTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Donation - Adult Literacy | 4,800 | 9,300 | Community Dev. Child Care Expenses | 13,63,26,905 | 5,24,89,942 |
| To Donation - Linguistic Work | 15,12,410 | 9,04,975 | Community Dev. Educational Exp. | 5,78,983 | 6,30,914 |
| To Donation for Travel | 6,500 | 7,496 | Vocational Training Expenses | 24,82,088 | 2,39,075 |
| To Donation General | 4,56,26,701 | 3,60,06,734 | Community dev. Adult Literacy | 6,51,113 | 5,29,580 |
| To Donation H.Q. Building | - | 3,100 | By General, Hospitality & Maintenance | | |
| To Donation Medical | 1,20,12,072 | 78,62,014 | Mission Field | 50,45,447 | 28,30,782 |
| To Donation - Monthly Pledge | 31,41,58,307 | 32,92,34,281 | Unforeseen Expenses | 1,95,033 | 62,028 |
| To Donation - Music & Media | 9,44,538 | 6,43,945 | By Medical Expenses | | |
| To Donation Navodaya Meetings | - | 1,100 | Mission Field | 50,74,839 | 76,84,451 |
| To Donation through Field congregation | 35,389 | 32,610 | By Meeting Expenses | | |
| To Donation - Training & Development | 4,08,672 | 76,400 | Mission Field | 8,17,101 | 3,48,458 |
| To Donation - Vehicles | 89,59,678 | 36,77,250 | Annual Meet Expenses | 51,37,254 | 19,650 |
| To Donation - Vocational Training | - | 13,03,800 | By Postage & Courier | | |
| To Miscellaneous Income | 4,31,579 | 3,05,799 | Mission Field | 4,01,115 | 2,92,742 |
| To Appollo Education Project Fund | 7,400 | 6,600 | Magazine Postage | 22,74,555 | 22,27,991 |
| To Benevolent Fund | 5,15,445 | 6,07,950 | By Printing & Stationary | | |
| To Building Fund | - | 20,04,665 | Mission Field | 7,52,088 | 6,02,403 |
| To Capital Fund | 55,01,894 | - | Magazine Printing | 94,93,708 | 78,94,232 |
| To Children Hr Studies Scholarship Fund | - | 20,17,008 | By Promotional Material Expenses | 51,21,303 | 26,45,735 |
| To Contigency & Emergency Relief Fund | - | 15,57,162 | By Rent & Rates | | |
| To Employees Provident Fund | 34,52,827 | 40,54,096 | Mission Field | 1,11,78,697 | 67,14,335 |
| To Endowment Fund Children Home | 1,32,950 | 2,78,500 | By Repairs & Renewals | | |
| To Endowment Fund Deposit - Life Member Publicity | 1,75,000 | 89,887 | Mission Field | 23,44,395 | 39,62,760 |
| To Endowment Fund - Missionary Support | 20,81,718 | 10,45,600 | By Salary & Allowances | | |
| To Endowment Fund People Group | - | 38,400 | Mission Field | 9,67,93,994 | 10,34,55,066 |
| To Endowment Fund Deposit Misy Children HR Study | 5,38,385 | 9,250 | Evangelists & Volunteers | 5,67,73,073 | 2,24,81,152 |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2021**

| RECEIPTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. | PAYMENTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Endowment Fund - Magazine Life Subscription | 4,025 | **26,951** | By Staff Higher Study Expenses | 57,501 | **1,39,255** |
| To FPF Loan Recovery | 1,59,050 | **1,26,460** | By Telephone & Trunk Calls | | |
| To Magazine Life Subscription | - | **3,58,003** | Mission Field | 31,86,404 | **29,36,296** |
| To Medical Reserve fund | - | **9,700** | By Travelling Expenses | | |
| To Pension Fund | - | **14,50,599** | Mission Field | 1,75,06,263 | **95,94,330** |
| To Staff Benefit Fund | - | **1,21,590** | By Vehicle Maintenance | | |
| To TDS Refund | - | **4,28,433** | Mission Field | 1,39,11,353 | **1,06,66,308** |
| To Project Advance Payable | - | **56,89,323** | **Administration Expenses:** | | |
| To Fixed Deposit Encashed | 5,55,44,123 | - | By Audit Fees & Other Expenses | 91,600 | **39,140** |
| To Contribution for Impact | 6,000 | - | By Bank Charges | 2,46,918 | **2,08,315** |
| To Endowment Fund Deposit Child Sponsorship | 2,58,336 | - | By Christmas Gift | 3,38,74,316 | **2,73,01,404** |
| To FPF | 6,81,253 | - | By Contribution To EPF | 91,90,837 | **2,75,00,398** |
| To Jeevandhara Fund | 1,442 | - | By Contribution To Pension Fund | 69,55,866 | - |
| To Contribution for Staff for Marriage | 1,50,000 | - | By FBF Gift | - | **1,13,235** |
| To Security & Caution Deposit | 1,218 | - | By Contribution To SBF | 1,24,850 | - |
| To TDS Payable | 6,278 | - | By General, Hospitality & Maintenance | 47,60,319 | **30,55,807** |
| To Staff Benefit Fund Loan | 15,130 | - | By Gratuity Gift | 46,48,183 | **34,89,027** |
| To Gratuity Fund | 12,89,516 | - | By Interest Payable to EPF | 1,00,43,941 | - |
| To Interest Payable to Staff | 10043941 | - | By Legal Fees | 2,07,820 | **1,26,700** |
| To Staff Benefit Fund | 1,62,900 | - | By Medical Expenses | 32,35,857 | **66,25,410** |
| To TDS Receivable | 10,87,736 | - | By Meeting Expenses | 27,01,752 | **15,92,335** |
| | | | By Office Maintenance | 30,54,025 | **33,94,540** |
| | | | By Pension Expenses | - | **74,45,105** |
| | | | By Postage & Courier | 23,58,743 | **16,34,038** |
| | | | By Printing & Stationary | 67,81,178 | **26,90,722** |
| | | | By Rent & Rates | 2,36,80,253 | **2,38,62,291** |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2021**

| RECEIPTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. | PAYMENTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Repairs & Renewals | 12,82,934 | 20,63,508 |
| | | | By Salary & Allowances | 2,91,54,050 | 2,86,74,962 |
| | | | By SBF Gifts | - | 1,25,040 |
| | | | By Subscription To Other Missions | - | 15,000 |
| | | | By Taxes & Insurance | 10,64,551 | 12,33,207 |
| | | | By Telephone & Trunk Calls | 14,98,785 | 13,17,661 |
| | | | By Travelling Expenses | 54,73,594 | 17,85,048 |
| | | | By Vehicle Maintenance | 23,41,158 | 16,77,295 |
| | | | By Staff Welfare | | |
| | | | Holiday Allowance | 17,73,718 | 11,15,893 |
| | | | Warm Cloth Allowance | 24,66,850 | 28,14,600 |
| | | | Staff Welfare - General | 22,64,869 | 25,73,376 |
| | | | By Building Fund Deposit | 18,69,432 | 3,00,603 |
| | | | By Building Fund Deposit | 7,00,000 | - |
| | | | By Children Hr. Studies Scholarship Fund Deposit | 17,90,924 | - |
| | | | By Project Advance Recoverable | 56,82,962 | - |
| | | | By Advance for EPF | 2,51,36,879 | 89,59,991 |
| | | | By Contribution To Impact | - | 4,400 |
| | | | By Childcare Fund | 70,88,669 | - |
| | | | By Endowment Fund Deposit - Child Sponsorship | 93,336 | 2,67,846 |
| | | | By Endowment Fund Deposit - Missionary Support | 5,97,295 | 12,97,709 |
| | | | By Endowment Missionary Children Hr Study | - | 5,50,091 |
| | | | By Fixed Deposit Earmarked | - | 8,78,77,355 |
| | | | By Fixed Deposit General | 25,00,000 | 10,01,39,125 |
| | | | By Pension Fund | 2,18,22,017 | |

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**RECEIPTS AND PAYMENTS ACCOUNT FOR THE YEAR ENDED 31 MARCH 2021**

| RECEIPTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. | PAYMENTS | 2019 - 2020 Amount in Rs. | 2020 - 2021 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| | | | By Payable To Staff for Marriage | - | 1,05,994 |
| | | | By Staff Benefit Fund Loan | - | 83,300 |
| | | | By TDS Payable | - | 6,997 |
| | | | By Assets Purchased | 4,46,79,300 | 3,43,94,846 |
| **Sub Total** | 76,39,66,669 | **72,97,38,112** | **Sub Total** | 74,45,22,121 | **72,16,22,593** |
| **To Opening Balance** | | | **By Closing Balance** | | |
| To Cash at Bank a/c | 74,44,894 | **88,11,392** | By Cash At Bank A/c | 88,11,392 | **1,98,04,064** |
| To Cash at Bank church a/c | 21,59,339 | **53,04,508** | By Cash At Bank Church A/c | 53,04,508 | **45,49,726** |
| To Cash at Bank fcr a/c | 1,69,67,702 | **1,07,79,645** | By Cash At Bank FCR A/c | 1,07,79,645 | **1,58,45,955** |
| To Cash at Bank fund a/c | 39,79,318 | **2,56,34,768** | By Cash At Bank Field A/c | - | **50,85,080** |
| To Cash in Hand a/c | 6,63,987 | **1,29,476** | By Cash At Bank Fund A/c | 2,56,34,768 | **1,30,52,443** |
| | | | By Cash in Hand A/c | 1,29,476 | **4,38,040** |
| **TOTAL** | 79,51,81,910 | **78,03,97,902** | **TOTAL** | 79,51,81,910 | **78,03,97,902** |

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For JOHN & JULIAN**
**CHARTERED ACCOUNTANTS**
**FIRM REGN NO : 014859S**

JOHN & JULIAN * CHARTERED ACCOUNTANTS * FRN 014859S Chennai-40

**Place : Chennai**
**Date : 24.09.2021**

**JOHN BERLIN**
**GENERAL SECRETARY**

**MANI SAMUEL J N S**
**TREASURER**

**M.JOHN RAVINDRAN**
**PARTNER**
**MEMBERSHIP NO.028566**
UDIN: 21028566AAAAIA6739

1 நவம்பர் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கைதியன்கின் வெய்ஃபெய்
திரு. தாங்லால் ஜெள
திருமதி. மேரி முர்மு தினேஷ்

# ஜம்மு

## ஜம்மு பிராந்தியம்:

### வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

**துதிக்க:** புதிதாக 21 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். கோட்டே கிராமத்திலுள்ள 3 குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். காதர்பூர் கிராமத்திலுள்ள ஜான்வியைப் பக்கவாதத்திலிருந்தும், மனானு கிராம குஸ்பு தேவியைச் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கினார். ரெட்டியா கிராம அஷ்வினி குமாரைக் கர்த்தர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்துக் காத்தபடியால் துதிப்போம்.

**ஜெபிக்க:** மலைப்பாங்கான மற்றும் கடுமையான குளிரினால் சூழப்பட்டதுமாய்க் காணப்படும் பகுதிகளாகிய பத்தோட், ராம்பன், தோடா, கிஸ்துவார், பாதர்வா, படார் ஆகிய 6 கிராமங்களிலும் நம்முடைய ஊழியத்தை விரிவாக்கம் செய்யவிருக்கும் திட்டத்தை தேவன் ஆசீர்வதித்துத் தர; ஆர். எஸ். புரா பகுதியில் தேவனை ஆராதிக்க நல்ல இடம் கிடைக்க; சுவிசேஷத்திற்கு ஆதரவு காண்பிக்கும் மகாசா, பத்வால், பாகட், ராம்தாஸி, ராஜ்புத் ஆகிய மக்களினக் கூட்டங்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## கர்சோக்:

### சுமித் குமார் தரியானி & துங்சிபெனி

**துதிக்க:** புதிதாக ஐந்து கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மற்றும் பின் தொடர்பணி ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார்; இதன் வாயிலாக அநேகர் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள விருப்பமாக உள்ளனர். தீபாவை நீண்ட நாட்களாக இருந்த முதுகு வலியிலிருந்து தேவன் சுகப்படுத்தினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீபா, ஜீத்ராம், பல்தேவ் சாந்த், சுனில், ராமன், ரீட்டா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; ரீட்டா டைபாய்டு காய்ச்சலிலிருந்து சுகமடைய; பின்மாற்றமடைந்துள்ள ஹித்தேந்தர் பாய், ஜெய்ராமின் குடும்பங்கள் மனம்மாறி மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நமது புதிய சக ஊழியர் சாமுவேல் தேவ வல்லமையினால் நிரப்பப்படவும், ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்யவும் ஜெபிப்போம்.

## *மனம் மாறிய எதிர்ப்பாளர்!*

*மேற்கு வங்காளம், மால்டா பணித்தளம், குட்கு என்ற கிராமத்திலுள்ள கணேஷ் முர்மு என்பவர் நமது சுவிசேஷ ஊழியத்திற்குப் பலவகைகளில் எதிர்ப்பு தெரிவித்தவர். இவரது குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் சுகவீனமாகி, எந்த மருந்து உட்கொண்டும் சுகம் பெறவில்லை. இச்சூழலில் இவர் அவர்களது அருகாமையில் வசித்து வந்த இரண்டு குடும்பங்கள் கிரமமாகக் கூடி ஜெபிப்பதையும், சமாதானமாக வாழ்வதையும் கவனித்தார். அப்பொழுது சூரஜ் ஹெம்ரோம் என்ற நமது சிறிய ஜெபக்குழுத்தலைவரொருவர் அந்தக் குடும்பத்தைச் சந்தித்து, மனநிலை பாதிக்கப்பட்ட இவரது மகளுக்காக ஜெபித்தார். தேவன் அவளுக்குச் சுகம் நல்கினார். அதன் விளைவாக அந்த முழு குடும்பமும், கிறிஸ்துவின் அடியவராக மாறினர். தேவனுக்கே மகிமை!*

## 2 நவம்பர் செவ்வாய்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் இயேசுவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. விசுவாசிகள் ஐக்கியக் கூட்டத்தில் கலந்து கொண்ட நமது விசுவாசிகளுக்கு அவர்கள் தங்களது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இனிவரும் நாட்களில் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க தேவன் கிருபை பாராட்டினார். காசாபட் பகுதியில் ஆலயம் கட்டுவதற்கு அதன் நிலத்தின் உரிமையாளருடன் குத்தகை ஒப்பந்தம் செய்ய தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காசாபட், சாரி கிராமங்களில் ஆலயக்கட்டுமானப்பணிகள் எவ்விதத் தடையுமின்றி நடைபெற; புதிய விசுவாசிகளான சன்னிதேவி, சாத்ராமின் ஆவிக்குரிய வாழ்வு வளர்ச்சியடைய; லால்சா – தான்சா கிராம சுயாதீன ஊழியர்களைக் குறித்த தவறான கருத்துகளை விட்டு விட்டு, நமது ஊழியர்கள் புதிய பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்கக் கடந்து செல்ல ஜெபிப்போம்.

### ரோஹ்ரு:
### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. விலங்குகளால் சூழப்பட்ட காட்டில் நமது ஊழியர்கள் தங்கியிருந்தபோது ஒவ்வொரு நாளும் தேவன் அவர்களைப் பாதுகாத்தார். நமது விசுவாசி பிரேமிற்கு நல்ல வேலை கிடைக்க தேவன் உதவி செய்தார். காந்தாவின் கணவருக்குச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து தேவன் சுகம் கொடுத்தார். ஷர்மிளாவிற்கு நேர்ந்த மின்சாரத் தாக்குதலிலிருந்து அதிசயமாய்த் தேவன் ஜெபத்தின் பலனால் அவரைக் காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை ஆராதனைகளில் கலந்து கொள்ளாதிருக்கும் ஷிவ்ராம், உத்தம் குடும்பத்தினர் மனந்திரும்ப; அர்ச்சனாவின் இரட்சிப்பிற்காக; துயினி, ரனோல் ஆகிய பகுதிகளில் தேவனை ஆராதிக்க நிரந்தரமான நல்ல இடங்கள் கிடைக்க; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகளான கரிஷ்மா, கமலா, சாரதா மீண்டும் விசுவாசத்திற்குள் வர; கோவிட்-19 நோய்த்தொற்றில் பாதிக்கப்பட்டிருக்கும் தர்ஷிணி தேவி பூரண குணமடைய ஜெபிப்போம்.

### ஆனி:
### ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. பகத் ராம் புதிதாக நமது ஊழியத்தொடர்பில் இணைந்துள்ளார். ராம் கிருஷ்ணாவின் குடும்பச்சிக்கல் நீங்கி, சமாதானம் பிறந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பந்தல் மற்றும் நீதட் திருச்சபைகள் ஆவிக்குரிய விதங்களில் நன்கு வளர; இடுப்பெலும்பு புற்றுநோயிலிருந்து தேவன் பகத் ராமிற்கு அற்புத சுகம் கொடுக்க; தகுந்த வேலைகளுக்கான தகுதித்தேர்வுகளில் நமது விசுவாசிகளான சந்திராவும் தீனாவும் நல்லமுறையில் வெற்றி பெற ஜெபிப்போம்.

## 3 நவம்பர் புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மார்கரெட் ஜோதிமணி ஆசீர்
திருமதி. ரேச்சல் ரமேஷ்பாய்

# பஞ்சாப்

## ஜைத்தோ:

### சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

**துதிக்க:** புதிதாக மட்டா, தப்திகன்னா, ஜீத்கல், ஸ்ரவான் ஆகிய கிராமங்களில் ஆராதனைக்கூடுகைகளைத் துவங்க தேவன் உதவி செய்தார். கோட்டகபுரா கிராம ராஜ்வீர் சிங் மூளைக்காய்ச்சலிலிருந்து சுகமானார். 10 நபர்கள் கிறிஸ்துவுக்குள் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மட்டா, ஜீத்கல் கிராம நமது விசுவாசிகளைத் தவறான உபதேசங்களில் வழிநடத்தும் காஷ்மீர்சிங் மற்றும் கலாசிங்கின் மனந்திரும்புதலுக்காக; நமது புதிய தொடர்பாளர் சோனுகுமார் பர்காடி காவல்துறையில் தான் இழந்த வேலையைத் திரும்பப்பெற; இயேசுகிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கர்ப்பப்பை கட்டியினால் பாதிக்கப்பட்டுள்ள பரம்ஜீத் கௌர் விரைவில் குணமடைய; குடிப் பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கும் பரம்ஜீத் சிங், பிட்டு சிங், முகேஷ் குமார் ஆகியோர் அதிலிருந்து விடுதலை பெறவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## மோகா:

### ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசத்தினாலும், புதிதாக 2 கிராம மக்கள் சுவிசேஷத்தினாலும் சந்திக்கப்பட்டுள்ளனர். ஜெபத்தின் பலனால் காட்டு கௌர், ரச்சனா கௌரின் குடும்பங்களில் அமைதியும் சமாதானமும் நிலவ தேவன் உதவி செய்தார். ஜாகி சிங்கிற்கு நேர்ந்த மிகப்பெரிய விபத்திலிருந்து தேவன் அவரைப் பாதுகாத்தார். போரா சிங், அமன் தீப் ஆகியோரைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவித்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜித்வால், சுட்சாக், ராய்கோட், கோட்லி, தரம்கோட், போபாரா, பிந்தர் காலன், சித்தேக் மற்றும் துடிக்கி கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; மது மற்றும் புகையிலை பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கும் குடும்பங்களின் இரட்சிப்பிற்காக; சுர்ஜீத் கௌர் மூளை பிரச்சனையிலிருந்தும், பரஜ் கண் பிரச்சனையிலிருந்தும், மன்ஜீத் கௌர் பித்தப்பைக்கல் பிரச்சனையிலிருந்தும், மன்தீப் சிங் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் குணமாக; சுவிசேஷத்திற்குத் திறந்த மனதுடனிருக்கும் பப்லி கௌர், பிந்தர் கௌர், காகு கௌர், ரேகா கௌர், ஆர்த்தி, மது, சன்னி, ஜஸ்வீர் சிங், ஜஸ்பிரீத் கௌர் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## 4 நவம்பர்
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. முத்தா ரத்தினகுமாரி சதீஷ்

### பட்டாலா:
**வால்வி நேதாஜி டாடு & கல்பனா**

**துதிக்க:** தானி, துனியாபூர், தபாய், நில் கலா, நாதாமுல்க் ஆகிய கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி முதன்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக கால்வா பகுதியில் நமது ஊழியத்திற்கு ஒரு கிளை மையம் துவங்க தேவன் கிருபை செய்தார். அஷ்வினா, ருந்து ஆகியோரை டைபாய்டு காய்ச்சலிலிருந்தும், மணியைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரஜனி சாரிங்கின் சுகப்பிரசவத்திற்காக; நத்தானியேல் மூளை பிரச்சனையிலிருந்தும், பாரி கால் வீக்கத்திலிருந்தும், ஆஷாராணி வயிற்றுப் புண்களிலிருந்தும், பிளஸ்ஸி, கிரேஸி நீண்ட நாட்களாக இருக்கும் காய்ச்சலிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

### ஃபரித்கோட்:
**ஸ்டீபன் R. & சிவகாமி T.**

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். சாதிக் பகுதியில் முதன்முதலாக ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. சப்பன்வாலி கிராம நமது விசுவாசி கலாவின் மகள் மற்றும் ஜஸ்விந்தரின் மகன் சைமருக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. பெரிய விபத்தினின்று தேவன் மேஜர் அவர்களின் மனைவியைப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மணிவாலா மற்றும் ஃபரித்கோட் பகுதிகளைச் சார்ந்த நமது விசுவாசிகளின் பிள்ளைகளான ராம் மற்றும் மன்வீருக்கு இராணுவப்பணிகளில் இணையும் வாய்ப்புகள் கிடைக்க; தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட காத்திருக்கும் 4 நபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சன்னி மற்றும் அவரது மனைவிக்கிடையே சமாதானம் பிறக்க; தனுர்மனா, கய்மோனா, ரத்திரோரி, கைமியானா பஸ்தி மற்றும் மைகோத்ரி கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; இரத்தப்புற்றுநோயிலிருந்து தேவன் பூமியின் தகப்பனாரைச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## ஹரியானா

### பர்வாலா: பாபுபாய் & சரஸ்வதி

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாசப்பாதையில் அடியெடுத்து வைத்துள்ளனர். சாகர்புரா, கஜுவாலா, லலோதா, சூரிவாலா, பட்டு ஆகிய கிராமங்களில் முதன்முதலாகச் சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்டுள்ளன. நமது விசுவாசி அஜய்குமாருக்கு சிக்கந்தரா பாத்தில் வேலை கிடைத்துள்ளது. கர்தானி கிராமத்தைச் சார்ந்த சுரேந்தரின் குடும்பம் சுவிசேஷத்திற்கு ஆவலாய்க் காத்திருப்பதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சானியானா கிராமத்தில் ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க; சமார், பால்மீகி, அரோரா, நாயக், குமார் மற்றும் சர்கார் மக்களினங்கள் மத்தியில் பெரும் ஆவிக்குரிய அசைவு உண்டாக; புலம்பெயர்ந்துள்ள கய்பிபூர் கிராம நமது விசுவாசிகளின் சரீர, ஆத்ம பாதுகாப்பிற்காக; சானியானா, போபுவா, கர்தானி, ஹாசன்கார், சோமன் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## 5 நவம்பர் வெள்ளி

### ஹரியானா பிராந்தியம்:

**பிபாபா பானி & பித்திகா**

**துதிக்க:** ஆசீர் கிராம ஆலயக்கட்டுமானப் பணி எவ்விதத் தடையுமின்றி நடந்தேறி வருகிறது. ஓதான் கிராம பட் இனமக்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கத் தொடங்கியுள்ளனர். பட்லி தவார், M P சுதார், ஜமால்பூர், மிரானா ஆகிய பகுதிகளைச் சார்ந்த நமது சபை மூப்பர்கள் ஊழியத்தில் ஊக்கமாக ஈடுபடுகின்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துல்ட்டு, அபூப் சாகர், காதர்பூர் ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; நமது தபாவாலி மைய சுதேச ஊழியர் சாம் சுந்தரை மூளை சம்பந்தமான பிரச்சனையிலிருந்தும், ரத்தியா திருச்சபை மூப்பர் ஒமியைச் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் தேவன் குணப்படுத்த; நமது ஊழியங்களைப் பல்வேறு கோணங்களில் தடைசெய்யும் மதுவின் மனந்திரும்புதலுக்காக; சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கொண்டுள்ள இஸ்லாம்பூர் மற்றும் நனக்மத்தா பகுதிகளில் ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## உத்தரகாண்ட்

### மல்தன்சோர்:

**ஷிஷூ பால் & அனிதா**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. ஜங்கிள்பார், மோகன் நகர் ஆகிய திருச்சபைகளில் அந்தந்த திருச்சபை மூப்பர்கள் சபை ஆராதனைகளைக் கிரமமாக நடத்தி வருகின்றனர். ஜாரி திருச்சபையில் மீண்டும் ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. திருமணமாகி 4 வருடங்களுக்குப்பின், ஜெபத்தின் மூலம் நமது விசுவாசி ராதிகாவிற்கு தேவன் மழலை பாக்கியத்தைக் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புலம் பெயர்ந்துள்ள விசுவாசிகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய பாதுகாப்பிற்காக; பால்பட்டி மற்றும் பல்ராம்பூர் பகுதிகளில் மீண்டும் ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட; சாய்னி, பிரஜாபதி ஆகிய இன மக்களிடையே சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

### *விடாவிசுவாச முயற்சி!*

*மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளத்திலுள்ள 'ஷாதா' கிராமத்தில் வசிக்கும் கோண்ட் இன மக்களுக்கு நமது ஊழியர்கள் ஒரு வருடத்திற்கு முன்னால் சுவிசேஷம் அறிவித்தனர். அச்சமயம் சுவிசேஷ கைப்பிரதியை விநியோகிக்கும்போது மக்கள் எதிர்த்தனர். ஆனால் நமது ஊழியர்கள் சோர்ந்துபோகாமல் விசுவாசத்துடன் தொடர்ந்து அங்கே ஊழியம் செய்ததின் பொருட்டு, ஒரு குடும்பம் அவர்களைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, உடல் முழுவதும் ஏற்பட்ட கட்டியினால் அவதியுறும் தங்கள் மகளுக்கு ஜெபிக்கும்படி கூறினர். நமது ஊழியர்களும் கிறிஸ்தேசுவின் மேல் விசுவாசம் வைக்கும்படி கூறி ஜெபித்து, அம்மகளுக்குத் தண்ணீர் குடிக்கக் கொடுத்தனர். என்ன ஆச்சரியம்! மறுநாளே அம்மகள் சுகம் பெற்றாள். அவளது பெற்றோர் மகிழ்ச்சியால் நிறைந்தனர். அதனிமித்தம் அவர்கள் தங்களது அக்கம்பக்கத்தினருக்கு இயேசுவைப் பற்றி நற்சாட்சி கூறினர். எனவே, தற்போது மேலும் 3 குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றனர். அல்லேலூயா!*

6
நவம்பர்
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. கிறிஸ்டி ராஜன்
செல்வி. மைனா மிலி

## டெல்லி

### பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** இணையதளம் வாயிலாக ஆராதனைகள் மற்றும் புதன்கிழமை ஜெபவேளைகளில் தவறாமல் பங்கெடுக்கும் கிருபையை தேவன் நமது விசுவாசிகளனைவருக்கும் இம் மட்டும் ஈந்துள்ளார். ஜெபத்தின் மூலமாக நமது விசுவாசிகளான ரவி, எலிசபெத், ஆமான் ஆகியோருக்கு தேவன் ஏற்ற வாழ்க்கை துணைகளைத் தந்துள்ளார். பெரிய விபத்தினின்று தேவன் சுதா மற்றும் அவரது மகனைக் காப்பாற்றியுள்ளார். ஜெபத்தினூடாக நமது விசுவாசி கங்காராமிற்கு வெளிநாட்டில் வேலை கிடைக்க தேவன் உதவிக்கரம் நீட்டியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை விசுவாசிப்பதை முன்னிட்டு தனது கணவரால் அடித்துத் துன்புறுத்தப்படும் நமது விசுவாசி பூனமின் கணவர் மனமாற்றமடைய; சுரேஷ் மற்றும் சோனுவின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; பாப்பாத்தி, தினேஷ், பரத், சிவகுமார், விக்கி, ஆலிஸ், விமலா ராம்கிஷோர் ஆகியோர் தங்களது கடன் பிரச்சனைகளிலிருந்து விடுபட; பல வழிகளில் ஊழியத்திற்கு இன்னல் விளைவிக்கும் நமது முன்னாள் தன்னார்வ ஊழியர் கிருஷ்ணன் மனந் திரும்ப ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### கேர்வாடா:

### பட்டேல் தேவுபாய் & ஜாமுபேன்

**துதிக்க:** ஒதபாடா கிராமத்தில் வைத்து நடைபெற்ற சபை மூப்பர்களின் கூடுகையின் மூலமாக 35 மூப்பர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டனர். மாதா கிராம ஜீத்து குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டார். தபாய்சா கிராம நனு லக்ஷ்மணைத் தீராத வயிற்றுப் பிரச்சனையிலிருந்தும், இந்திரா, கருணா, ரேகா மற்றும் அனிதாவைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், சந்தீப்பைச் சிறுநீர் தொற்றிலிருந்தும், காந்தி பிருந்தாவை இடது கை பக்கவாதத்திலிருந்தும் தேவன் சுகம் பெறச் செய்தமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறான குற்றச்சாட்டினால் நிலுவையில் இருக்கும் நீதிமன்ற வழக்கிலிருந்து காஜுரி கிராம ஹித்தேஷ் ஃபாலிஜா விடுதலை பெற; கமதி, காலன்தர், பலிச்சா, நவகாரா ஆகிய பகுதிகளில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட; நமது சுதேச ஊழியர் அசோக்பாய் நெஞ்சுக்கட்டியிலிருந்தும், போகாரி கிராம திலீப்பாய் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், பலிச்சா கிராம ஆஷிஷ் ஊமை மற்றும் கால் ஊனப் பிரச்சனையிலிருந்தும், லெகனா கிராம சவிதா கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்தும் ஆரோக்கியம் பெற ஜெபிப்போம்.

7
நவம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பால சுப்ரமணியன் (ஏ) சைமன் பீட்டர்

### அனுப்கார்: போடார் அம்ருத் பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்து வண்டை வந்துள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் சொல்லப் பட்டுள்ளது. நமது விசுவாசி தாராசெம் மிற்குச் சொந்த வீடொன்று கிடைத்துள்ளது. தன்னார்வமாக 2 PGM பகுதி திருச் சபையில் அமித்தும் மானவியும் ஆராதனையை நடத்த முன்வர தேவன் அவர்களுக்குத் தந்த ஊக்கத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரின்ஸ், விக்ரம், பாலஜிந்தரின் குடும்ப இரட்சிப்பிற்காக; எல்லாக் கிராமங்களிலும் ஜெபக்குழுக்களும், வேதாகம வகுப்புக்குழுக்களும் உருவாக் கப்பட; சம்பா மற்றும் மகேந்திர சிங்கின் குடும்பங்களில் சண்டைகள் நீங்கி, சமாதானம் உருவாக ஜெபிப்போம்.

### உதய்பூர்:
### சுனில் குமார் வசாவா & பீனாக்ஷி

**துதிக்க:** மகதாதேவ் கிராமத்திலிருந்து புதிதாக 18 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். மடாதி, செலினா, அகோடதா, குக்தர் ஆகிய 4 கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளின் மூலம் அதில் பங்குப்பெற்றவர்களுக்கு அவர்கள் தம் ஆவிக்குரிய வாழ்வின் அர்ப்பணிப்பையும் ஊழிய அழைப் பையும் புதுப்பித்துக்கொள்ள தேவன் தயவு புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வகாடி பீல் இன மக்கள் மத்தி யில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; புதிய விதிமுறைகளையும், அணுகுமுறைகளையும் கையாண்டு சுவிசேஷத்தைப் பரம ஞானத்தோடும், வல்லமையோடும் மக்களுக்குத் தீவிர மாக எடுத்துரைக்க; நமது விசுவாசி ஜமுனா லாலின் குடும்பம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

### கைர்த்தல்:
### செல்வராஜ் & செல்வம்மாள்

**துதிக்க:** 6 கிராமங்களில் எந்தவித இடையூறுகளுமின்றி மாலை நேர ஆவிக்குரிய கூடுகைகளை நடத்த தேவன் ஒத்தாசை நல்கினார். விசுவாசிகளல்லாத வர்களின் குடும்பங்களிலிருந்து அநேக பிள்ளைகள் நமது ஞாயிறுப்பள்ளி வகுப்புகளிலும், ஆராதனைகளிலும் உற்சாகமாகப் பங்கேற்கின்றனர். சிறு நீரகப்பிரச்சனையிலிருந்து தேவன் சன்னியைச் சுகமாக்கினார். ராய்சீக் சமுதாயத்தினர் வாழும் சவான்தி கிராமத் திற்கு முதன்முறையாகச் சுவிசேஷம் சுமந்து செல்ல தேவன் கிருபை தந்த தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமுதாய தீயப்பழக்கவழக்கங் களுக்குச் சில சமயங்களில் இரையாகிப் போகும் நட் இன புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய திட வளர்ச்சிக்காக; பெகரோகி கிராம நமது புதிய விசுவாசி ரவீந்தரின் குடும்பம் கிறிஸ்துவின் மீது தான் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய; சவான்தி கிராம குர்வீத் சிங் புற்று நோயிலிருந்து நலம் பெற ஜெபிப்போம்.

**8 நவம்பர் திங்கள்**

# உத்தரப் பிரதேசம்

## காட்டம்பூர்:

### ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். 7 கிராமங்களில் முதன்முதலாகச் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. சில்லி பகுதி சபைத்தலைவர்கள் ஊழியத்தினிமித்தம் வந்த பிரச்சனையில் நமது ஊழியர்களுடன் துணை நின்றனர். ஜோகனாபாத் மற்றும் காட்டம்பூர் பகுதிகளில் நடந்த ஆராதனைக்குழுக்களில் அநேக புதிய மக்கள் கலந்து கொள்ள தேவன் உதவி நல்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கையிட; இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் பணித்தள அளவிலான வாலிபர் மற்றும் இளம் சபை மூப்பர்களுக்கான பயிற்சிக் கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துத் தர; ஷில்ஃபி, மீரா, மகிமா மற்றும் ஜோதியின் வாழ்க்கை துணைகளுடைய இரட்சிப்பிற்காக; சுமிதா, கோமதி, ஸ்வாதி தேவி, ரதி, ராமு ஆகியோர் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## கோண்டா சிறுவர் விடுதி:

### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** ஏறக்குறைய 50 சிறுபிள்ளைகள் கலந்து கொண்ட பலுவா கிராம விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். 10-ம் & 12-ம் வகுப்பு நமது விடுதி மாணவர்கள் மீண்டும் விடுதிக்கு வரவும், அவர்களுக்கு நல்ல பள்ளிகளில் சேரும் சிலாக்கியம் கிடைக்கவும் தேவன் உதவி செய்தார். குடும்பக்கட்டுப்பாடு சிகிட்சைக்குப் பின்னும் கருவுற்ற நமது விசுவாசி ரவியின் மனைவிக்கு எந்த ஆபத்துமின்றி சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோண்டா பணித்தள நிலத்திற்கு எதிராக இருக்கின்ற நீதிமன்ற வழக்கிலிருந்து தேவன் விடுதலை தர; 8-ம், 9-ம் மற்றும் 11-ம் வகுப்புப் படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக; கோண்டா இன மக்களிலிருந்து நட் மற்றும் மூர்யா மக்களினங்கள் வரை நமது ஊழியம் விரிவடைய; நமது விடுதிப்பிள்ளைகளின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## *தவறான கண்ணோட்டம் மறைய ஜெபிப்போம்!*

*மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளத்தில் பல வருடங்களாகக் காட்டு நிலங்களில் இம்மக்கள் விதைத்து அறுவடை செய்து பிழைத்து வருகின்றதால், அங்குள்ள பழங்குடி மக்களுக்கும், வனத்துறை அதிகாரிகளுக்கும் நிலத்தகராறு ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் அரசாங்க வனத்துறை அதிகாரிகள் இம்மக்கள் உழுவதற்குப் பயன்படுத்திய டிராக்டரை எடுத்துச் சென்று விட்டனர். செப்டம்பர் 24-ம் தேதி, ஏறத்தாழ 150 பழங்குடி மக்கள் மாவட்ட வன அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று தங்கள் டிராக்டரை வலுக்கட்டாயமாக எடுத்து வந்தனர். இதில் பர்தன்பூரைச் சேர்ந்த நமது சபை மூப்பரும் ஒருவர். அவர் இந்தப் பழங்குடியினருக்கு நிலம் கிடைப்பதிலும், நிலப்பட்டாவிற்கு ஏற்பாடு செய்வதிலும் முனைந்து நிற்கிறார். இதனால் வனத்துறை அதிகாரிகள் மிகக் கோபமாக இருப்பதுடன், கிறிஸ்தவர்கள்தான் இப்பழங்குடியினர் மத்தியில் நக்சலைட் தீவிரவாத நெறிகளைத் தூண்டிவிடுகின்றனர் எனக் குற்றம் சாட்டியிருக்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டு, நமது ஊழியத்திற்குப் பங்கம் விளைவிக்காதபடி நல் சுமூகமானத் தீர்வு பெற ஜெபிப்போம்.*

## 9
## நவம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. செல்லத்துரை J.
திரு. ஜெரால்டு சேவியர்

## புந்தேல்கண்ட் பிராந்தியம்:
### N. ராஜதுரை & பிரேமா

**துதிக்க:** புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவின் மீது வாஞ்சை காட்டுகின்றனர். ஜான்சியிலுள்ள நமது மிஷனெரிப் பயிற்சிக் கூடத்தில் இணைந்துள்ள 13 புதிய மிஷனெரிகளுக்கு ஹிந்தி மொழியைக் கற்பிக்க தேவன் உதவி நல்கினார். புத்தராம்காபுரா பகுதி விசுவாசிகள் யாவரும் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் மிக ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். தலபார் கிராம நிஷாத் இன மக்களில் பின்மாற்ற மடைந்திருந்த நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஜான்சி விடுதிக்கும், பிரேம்நகர் ஆலயத்திற்கும் அரசாங்க அனுமதி கிடைக்க; நியாமத்பூர் மற்றும் கோஹாத் மையங்களில் புதிதாகச் சுதேச ஊழியர்கள் நியமிக்கப்பட; மோத் பணித்தள நமது சுதேச ஊழியர் பாலாதீனிற்கு ஏற்பட்ட விபத்தினால் அவரது இடது கையில் உண்டாகியிருக்கும் காயம் விரைவில் குணமடைய; டப்ரா பணித்தள நமது ஜீப்குழு ஊழியத்தின் பாதுகாப்பிற்காக; சமார், பரேலா, பீல், கோரி, செஹ்ரிஷ், கேத்ரியா மற்றும் நிஷாத் இனமக்கள் செவிசாய்க்கும் சுவிசேஷத்தினால் அவர்கள் மத்தியில் மாபெரும் ஆவிக்குரிய எழுச்சியுண்டாக ஜெபிப்போம்.

## கைம்கஞ்ச்:
### எபநேசர் G. சாம் & ஜெபராணி

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். 3 கிராமங்களில் புதிதாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளான பிரித்வி தர்வாஜா கிராம ரிங்கி, கம்பிள் கிராம பூஜா குடும்பம், நீபுல்பூர் கிராம சானி குடும்பம் ஆகியோர் அரசாங்கச் சட்ட உதவியின் கீழ் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ளும் கிருபையைப் பெற்றனர். நமது ஹசரேன் பணித்தளத்தில் நடைபெற்ற பெண்கள் பயிற்சிக்கூடுகையில் பங்குப்பெற்ற 4 பெண்கள் கர்த்தருக்கென ஊழியம் செய்ய முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் பிள்ளைகளான ஹாத்சினி கிராம பிரியங்கா, பிரித்வி தர்வாஜா கிராம ரிங்கி, இஜோரி கிராம சுக்தேவி, சிலக்கா கிராம பாபுலி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கை துணைகளமைய; ஆச்சார்ய பாகர்பூர் கிராம பரஸிற்கு விபத்தினிமித்தம் ஏற்பட்ட எலும்பு முறிவுகளிலிருந்து அவர் குணமடையவும், தான் இழந்து போன வேலை அவருக்குத் திரும்ப கிடைக்கவும்; நமது புதிய விசுவாசிகளான அலிகன்ஜ் கிராம சோபித், பிசாம்பர் மற்றும் ராணி கௌர்பூர் கிராம அகிலேஷிற்கு நல்ல வேலைகள் விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

10 நவம்பர் புதன்

உபவாச ஜெபநாள்

## கான்பூர் பிராந்தியம்:

**ஸ்ரீனிவாசன் & ஷீபா G.**

**துதிக்க:** பஸ்தி பணித்தளத்தில் ருதௌலி என்ற துணை மையம் தொடங்கக் கர்த்தர் உதவி செய்தார். 28 கிராமங்களில் சிறுவர்களுக்கான விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தியதின் விளைவு, அப்பிள்ளைகளின் மத்தியில் நல்ல திருப்புமுனை உருவாகியுள்ளது. இப்பணித்தள நமது ஊழியக்குழுவில் புதிதாக மிஷனெரி சதீஷின் குடும்பம் வந்து இணைந்துள்ளனர். கம்பிள் திருச்சபையைச் சார்ந்த நமது இளம் விசுவாசியொருவரின் ஜெபத்தின் மூலம் கர்த்தர் ராஜேஷின் குடும்பத்தை ஆட்டி அலைக்கழித்து வந்த பிசாசுகளைத் துரத்தியடித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதின் நிமித்தம் ஈடாவா பட்டண நீதிமன்ற வழக்கில் சிக்கி சிறை வைக்கப் பட்டுள்ள நமது சுதேச ஊழியர் ஷியாம் சுந்தருக்கு ஜாமின் கிடைக்க; நமது ஊழியத்திற்குத் தொந்தரவு தரும் வினோபா நகரைச் சேர்ந்த அமின் மற்றும் கோரிலாலின் மனங்களைக் கர்த்தர் மாற்ற; பில்கூர் பணித்தள ஐமா திருச்சபையில் பின்மாற்றமடைந் திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குத் திரும்ப ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

## டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா**

**துதிக்க:** கிறிஸ்தவ விசுவாச வாழ் விற்குள் புதிதாக 4 நபர்கள் அடி யெடுத்து வைத்துள்ளனர். புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் விதைக்கப்பட்டுள்ளன. சுல்தான்பூர் திருச்சபையைச் சார்ந்த நமது விசுவாசி அத்தார் சிங் சாகர் முழுநேர ஊழியத் திற்கென தன்னை அர்ப்பணித்துள்ளார். பற்பல கிராமங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தேவன் நமது ஜீப்குழு ஊழியத்தைப் பலவிதங்களில் நன்கு பயன்படுத்தி வருகிறார். வேதாகம வகுப்புக்குழுக்களில் வேதாகம வகுப் பிற்கான சாதனங்களை நமது சபை மூப்பர்கள் சிறப்பாக எடுத்து பயன் படுத்துகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை செயல்பாடுகளை முறையாக எடுத்து நடத்துவதற்கு நமது சபை மூப்பர்கள் முன் வர; நமது எல்லாத் திருச்சபைகளும் சுயேட்சை யாகச் செயல்படுவதற்குரிய திட்டங்கள் யாவும் சிறப்பாக அமல்படுத்தப்பட; பிரேம் நகர் ஆலய அடித்தள கட்டு மானப்பணி தொடங்கப்பட; மெஹான் கிராமத்தில் ஓர் திருச்சபை உருவாக; நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்ளும் புதிய மக்கள் கர்த்தரின் அன்பைச் சரியாகப் புரிந்து கொள்ள ஜெபிப்போம்.

11 நவம்பர் வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கந்திகுப்ப இஸ்ரேல்
திருமதி. பிரேம்லதா சுரேஷ் மால்தோ
திருமதி. ஜாய் பெல்லா இவாஞ்சலின் சுனில்
செல்வி. ஏஞ்சல் ராஜ் R.V.

## கண்ட்வா பிராந்தியம்: ஐசக் & சீதா

**துதிக்க:** எந்தவித எதிர்ப்புமின்றி தேசிய உபவாச ஜெபக்கூடுகையை அனைத்துப் பணித்தளங்களிலும் நடத்த தேவன் உதவி செய்தார். பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசி அகத்தியா மீண்டும் விசுவாசத் திற்குள் வந்துள்ளார். நமது நேப்பாநகர் மிஷனெரியின் வீட்டில் இரண்டு விஷப் பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், அவைகளினால் எவ்வித ஆபத்துமில் லாமல் தேவன் பாதுகாத்தார். நிம்ப்ரானி கிராம ஆர்த்தி மற்றும் பஞ்ஜாரி கிராம சுக் மாவைத் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து கர்த்தர் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது பிப்பர்குந்த் கிராமம் முழுவதுமே எதிர்க்கின்ற சூழ்நிலையில் நமது புதிய விசுவாசி சௌலாவின் குடும்பம் தங்களது விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; நமது விசுவாசிகளை ஆராதனை நடத்தவிடாமல் தடுக்கும் மந்தகேடா கிராம பட்டுவாரி மனந்திரும்ப; தேவ்கிரி கிராம சங்கீதா, நிம்ப்ரானி கிராம கிருஷ்ணா, ககர்தா கிராம சுக்தேவ் ஷர்மிளா, பந்தோ கிராம காஞ்சன் ஆகியோரைத் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து மீட்டெடுக்க; ஜம்தாத் கிராம சுரேஷ் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபட ஜெபிப்போம்.

## கர்கோன்: ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** 18 நபர்கள் முதன்முறையாக இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித் துள்ளனர். புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போன நமது திருச்சபை மூப்பரான பனாவாவின் 6 வயது மகன் சில நாட்களுக்குப் பின் மீண்டும் கண்டு பிடிக்கப்பட்டான். போஸ்தா கிராம அர்ஜுனை தேவன் அநேகவித சுகவீனங் களிலிருந்து முழுமையாகச் சுகப்படுத்தி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிகளவில் எழும்பிக் கொண்டிருக்கும் எதிர்ப்பலைகளின் கொந்தளிப்பை தேவன் அமர்த்தித் தர; ஓட்டா கிராம பாபாவைக் கால் வீக்கத்தி லிருந்தும், உம்ரியா கிராம சுரேஷை மனநோயிலிருந்தும் தேவன் சுகம் பெறச் செய்ய; நமது விசுவாசி ஜித்தனுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

## பால்: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், 12 கிராமங்களைச் சுவிசேஷத்தினால் புதிதாகச் சந்திக்கவும் தேவன் தயவு காண்பித்தார். வைரல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த ஏறத்தாழ 25 குடும் பங்கள், நடத்தப்பட்ட உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டப்பின் அற்புத சுகம் பெற்றனர். தீய ஆவியின் பிடியிலிருந்து தஸ்ரிபாய் விடுவிக்கப்பட்டதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலாதிக் கிராமத்திலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனந்திரும்ப; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசி சந்தோஷ் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்க தேவன் உதவி செய்ய; கால் வலியிலிருந்து லக்கலையும், பக்கவாதத்திலிருந்து ஜங்கல்யாவையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## 12 நவம்பர் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சங்கர் P.

### தூல்கோட்: ஐசக் & சீதா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. உபவாச ஜெபத்தின் மூலம் அநேகருடைய சரீர மற்றும் ஆவிக்குரிய கட்டுகள் அகல தேவன் கிருபை செய்தார். மொர்கெதா கிராமத்தில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் அழகுற ஆசீர்வதித்துக் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய ஆவியின் பிடியினிமித்தம் பாதிக்கப்பட்டிருக்கும் போரி கிராம சுனிதாவின் கண்பார்வையற்ற தன்மையிலிருந்து தேவன் அவரை விடுவித்துக் காப்பாற்ற; சக்மாலியா கிராம பயிலாவை மரணப்படுக்கையிலிருந்தும், சிவதேக்கடி கிராம உத்தமை கால் பெலவீனத்திலிருந்தும் தேவன் பூரணமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### அமலகாச்சி: ஆல்பர்ட் பிரபாகரன் & முருகம்மாள் எஸ்தர்

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் நெருங்கியுள்ளனர். 7 மாவட்டங்களில் 3 நாட்கள் உபவாச ஜெபக்கூட்டங்கள் நடத்தவும், அதில் நமது சுதேச ஊழியர்களும், சபை மூப்பர்களும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெறவும் கர்த்தர் தயவு பாராட்டினார். சனாதங்கா கிராம ஆலயச்சுற்றுச்சுவர் கட்டும்பணி நன்றாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கின்ற மக்களைத் தொந்தரவு செய்யும் பஹாரி கிராம தர்மா பஹாடியா மற்றும் குட்டிபாடா கிராம ஜமா பஹாடியாவின் மனமாற்றத்திற்காக; குமார்பாக் பஹாடியா மொழியில் தயாராகிக் கொண்டிருக்கும் சுவிசேஷப்பிரதிகளும், பாடல் புத்தகங்களும் நல்லமுறையில் மொழிபெயர்க்கப்பட; முதுகு வலியினால் கஷ்டப்படும் நமது மிஷனெரிகளுக்குப் பரிபூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### படிட்டோலா:
### ஜீவன் ரஞ்சன் & ஸ்னிக்தா

**துதிக்க:** புதிதாக 55 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். படாதல்தாலி, லாரா குட்டு, பாகர்பூர், ஜாப்ரி ஆகிய இடங்களில் ஆலயக்கட்டுமானப் பணிகள் எந்தவித இடைஞ்சலுமின்றி நடந்தேறி வருகின்றன. ஜாப்ரி கிராமத்தில் மேலும் 2 குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். நீண்ட இடைவெளிக்குப்பின், மீண்டுமாகச் சிறுவர் பகல்நேர பராமரிப்பு மையம் திறக்கப்பட்டு, அதில் சிறுவர்கள் கிரமமாக வந்து பயன்பெற தேவன் கிருபை செய்கிறார். மனச்சோர்பினின்று ஜாண் மூர்முவை தேவன் விடுவித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை ஆராதனைகளை நடத்தும் பொறுப்பினை நமது சபை மூப்பர்கள் மனதார ஏற்கவும், அவர்கள் பகுதியில் இன்னும் ஒருமுறையேனும் சுவிசேஷத்தைக் கேட்டிராத மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை எடுத்துரைக்க அவர்கள் முன்வரவும்; வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளின் மூலமாக உலுவட்டு, லப்ரி, போர்பந்த், இலக்கி, சிக்னாதான், குஷும், போக்னாதிக் ஆகிய கிராமங்களில் ஆவிக்குரிய அசைவு உண்டாக ஜெபிப்போம்.

## 13 நவம்பர் சனி

### பர்ஹர்வா :

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** குமானி பகுதி விசுவாசிகள் தொடர்ச்சியாக ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். ஜுக்தா பகுதி இளைஞர்களுக்கென முதன்முறையாக இளைஞர் நிகழ்ச்சியொன்று நடத்த தேவன் அநுக்கிரகம் ஈந்தார். வேதாகம வினாடி வினா நிகழ்ச்சியில் ஞாயிறு வேதாகமப்பள்ளி சிறுவர்கள் அதிக விருப்பத்துடன் கலந்து கொண்டனர். பாட்னா சௌக் கிராமத்தைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர் பப்லு பிரசாத் சுவிசேஷத்தின் மீது அதிக ஈடுபாடு காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதாய் துக்கூர் கிராம ஜோஸ்னாதேவி மூட்டெலும்பு வலி களிலிருந்து சுகம் பெற; அனுவின் சுகப்பிரசவத்திற்காக; பிற மாநிலங் களுக்குத் தொழில் நிமித்தமாக இடம் பெயர்ந்து செல்லும் நமது விசுவாசிகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய பாதுகாப்பிற் காக; ஜெய் பிரகாஷ் ஷா & அனுவின் வாழ்க்கையில் தேவ சமாதானம் நிரம்ப ஜெபிப்போம்.

### புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, பந்தேனி :

**விக்டர் ஜெயசீலன் & பிரின்சஸ் நகோமி; கிப்ஜென் & மாவி; சாந்தினி, மெர்ஸி, ஏஞ்சல்**

**துதிக்க:** நமது பள்ளியாசிரியர்களான சீலாஸ் மால்தோ, மார்கஸ் மால்தோ மற்றும் சுனில் மால்தோ தங்களது கல்வி நிலையை மேம்படுத்திக் கொள்ள பர்ஹர்வாவிலுள்ள கல்லூரியில் ஆங்கிலம், ஹிந்தி, வேதியியல் பட்டப் படிப்பிற்கென இணைந்துள்ளனர். தெலி பகுதியில் விசுவாசிகளுக்கென தேடுவோர் முகாமொன்று நடத்தியதில் 50 புதிய நபர்கள் கலந்துகொண்டு, இயேசுவின் நற்செய்தியை முதன்முதலாகக் கேட்டறிந் தனர். பந்தேனி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து நமது விடுதியை நோக்கி மருத்துவ உதவியை நாடி வந்த 20 நோயாளிகளுக்கு தேவையான மருந்துகள் கொடுக்கவும், அவர்கள் யாவரும் சுகமடையவும் தேவன் உதவி புரிந்தார். பந்தேனி மற்றும் அருகேயுள்ள பல கிராமங்களில் இருந்து மழைக்காலங்களானாலும் தினமும் 50 முதல் 80 பிள்ளைகள் நமது சிறுவர் பகல்நேர பராமரிப்பு மையங்களுக்குத் தவறாமல் வந்து பயன்பெறுகின்றதற் காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் பாடத்திற்கென 2 ஆசிரியர் களும், கணிதப் பாடத்திற்கென 2 ஆசிரியர்களும் கிடைக்க; இளங்கலை பட்டப்படிப்பிற்கென விண்ணப்பித் திருக்கும் சஞ்ஜீவ் மசிஹ் மற்றும் மனுவேலிற்கு கல்லூரியில் அவர்கள் விரும்பும் பாடப்பிரிவுகளில் இடம் கிடைக்க; நமது பள்ளியிலுள்ள நூலகக்கட்டிடத்தைப் புதுப்பிக்கும் பணி சீராக நடைபெற்று முடிய ஜெபிப்போம்.

**14**
**நவம்பர்**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரஞ்சித் ஜேம்ஸ்
திரு. ஜாண் C.H.
திருமதி. ஜெலின் சங்கர்
செல்வி. மகேஷ்வரி ரெபேக்கா
திரு. வால்வி தீனா தானா

## தெலோ:

**பால்ராஜ் P. & ஜெபஜோதி**

**துதிக்க:** கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் புதிதாக 25 நபர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பாரமசியா கிராம துலாத் ஹெம்ரோம், பாதர்கட்டா கிராம அனிதா டுடு ஆகியோர் சுயநினைவற்ற நிலையிலிருந்து மீண்டு வர தேவன் கிருபை ஈந்தார். பலிதி கிராமத்தில் தன்னார்வ ஊழியர்களுக்கென நடத்தப்பட்ட தன்னார்வ ஊழியர் பயிற்சி நிகழ்ச்சியில் 39 தன்னார்வ ஊழியர்கள் பங்குப்பெற்று பயனடைய கர்த்தர் அருள் புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாரமசியா மற்றும் சாம்பூர் கிராமங்களில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட காத்திருக்கும் நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய நல் வளர்ச்சிக்காக; கோல்கி, தாம்கி, ஜுரல் ஆகிய கிராமங்களில் நடைபெற விருக்கும் மாலைநேர ஜெபக்கூடுகை களின் ஆசீர்வாதங்களுக்காக; கிந்துவா, தும்ரியா ஆகிய கிராமங்களில் புதிய திருச்சபைகள் தொடங்கப்படவும், அத் திருச்சபைகளை வழிநடத்திச் செல்ல தகுந்த சபை மூப்பர்கள் கிடைக்கவும்; கக்ஸவா மற்றும் ரங்கா பகுதிகளில் ஆலயக்கட்டுமானப்பணிகள் ஆரம்பிக் கப்பட ஜெபிப்போம்.

## வனஞ்சால் பிராந்தியம்:

**பாகி சத்தீஷ் &**
**முத்தா ரத்னகுமாரி**

**துதிக்க:** 24 நபர்கள் புதிதாக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித் துள்ளனர். 140 கிராமங்களில் நடந்த பின்தொடர் ஊழியப்பணிகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துக் கொடுத்தார். தர்மேந்திர ராய், கண்ணு ராய், திலீப் ராய், கீதா தேவி, புதன் ராய், லால்முனி, விந்தா தேவி, கஜேந்தர் ராய், சுமந்தி தேவி ஆகிய நமது புதிய தொடர்பாளர்களும் அவர்களது குடும்ப அங்கத்தினர்களும் தேவனுடைய வார்த்தையின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றனர். நமது விடுதிப் பிள்ளைகள் 3 பேருக்கு மகாராஜா கல்லூரியில் இடைநிலை சேர்க்கைக்கு வாய்ப்பு கிடைத்ததற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போக்தா, நாக்ராபத்தூர், பிப்ரி, பட்டுடி, பீம்பஹாடி, நிஜார், நாராயண்பூர் ஆகிய கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; லபேடா, பத்ராதகா, கரோதிக், பிலாய்கட்டி மற்றும் பக்ரிபாரா பகுதி திருச்சபை மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சுவிசேஷத்திற்குத் திறந்தவாசலைக் கொண்டுள்ள புயன் இன மக்கள் மத்தி யில் ஆவிக்குரிய நல்மாற்றம் உருவாக; நமது விடுதிப்பிள்ளைகளான சந்தோஷ் தெகிரி மற்றும் ராபி தெகிரியின் மேற்படிப்பின் காரியங்களுக்காக ஜெபிப்போம்.

**15 நவம்பர் திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் பிசோயி

திருமதி. வசாவா சவிதாபேன் பச்சியாபாய்

### சுந்தர்பஹாடி:

**டேனியல் தனசிங் & சுவிலா ஞானப்பூ**

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்கியுள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 12 கிராமங்களில் விசுவாசிகளுக்கான கூடுகைகளை நடத்த தேவன் ஒத்தாசை நல்கினார். ஜுத்பூர் கிராம சிக்கந்தர் சோரேன் மற்றும் தம்ரு பகுதி மெர்லினா முர்முவை ஜெபத்தின் மூலம் மூளை மலேரியா காய்ச்சலிலிருந்து தேவன் சுகமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தினால் சந்திக் கப்படாத மஸ்பாடா, அம்பாலி, அசலி பாடா, சபாய்குடி, துமர்தாரி, பஸ்ஜாடி, சாகர்பூர், லவ்தானா, ரோக்தா, ஜம்திகா, கல்மா, கய்சால் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் உட்புகுவதற்கான வாய்ப்பு கிடைக்க; சரோனி மற்றும் மோகன்பூர் திருச்சபைகளை முன் நின்று நடத்த அந்தந்த சபை மூப்பர்களே முன்வர ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### ஜியாகன்ஜ்:

**M. ஜாண் & செலினா ஜாய்ஸ்**

**துதிக்க:** கோலாபரி, நஃப் சந்திராபூர், ஹரிகிருஷ்ணாபூர், மெடு ஆகிய 4 கிராமங்களில் தேடுவோர் முகாம் நடத்திய தின் மூலம் தேவன் அதை அநேகருக்கு மிகுந்த ஆசீர்வாதமாக மாற்றித் தந்தார். ஹல்தார் திஹி கிராமத்தைச் சார்ந்த முன்னா தூரியைப் பல்வேறு வியாதி களின் கூரிலிருந்து தேவன் சுகப்படுத்தி யதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் நமது புதிய தொடர்பாளர்களின் இரட்சிப்பிற்காக; தனது இடது கையில் வலியோடு அடிக்கடி காய்ச்சலினால் கஷ்டப்படும் நமது மிஷனெரி சகோதரி. செலினா ஜாய்ஸிற்கு பூரண சுகம் கிடைக்க; முர்ஸிதாபாத் மற்றும் நடியா மாவட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷத்தின் மூலம் நன்மையான விளைவுகள் உருவாக ஜெபிப்போம்.

### கிழக்கு கங்கை பிராந்தியம்:

**உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி**

**துதிக்க:** சுவிசேஷத்தினால் புதிதாக 17 கிராமங்கள் சந்திக்கப்பட்டுள்ளன. சோக்பாண்டி மால்டா மற்றும் பஞ்ச்பாரா கஜோல் கிராமங்களில் நடைபெற்ற தேடுவோர் முகாம்களை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். பட்டாசாரியாவை வைரல் காய்ச்சலிலிருந்து தேவன் குணமாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிச்சலபாடா மற்றும் ஹிதகுந்தி பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆலயக்கட்டுமானப் பணிகளுக்காக; தவறான குற்றச் சாட்டினால் நீதிமன்ற வழக்குகளில் சிக்கித் தவிக்கும் முரளிகன்ஜ் பகுதி விசுவாசிகளின் விடுதலைக்காக ஜெபிப்போம்.

**16**
**நவம்பர்**
**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஆபிரகாம் தாமஸ்

### மால்டா:
### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** புதிதாக 14 நபர்கள் கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது ஊழியர்களின் ஜெபங்களைக் கேட்டு, முன்சி சோரேன் குடும்பம் இயேசுவை ஏற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்தார். மானிக்பூர், குட்கு ஆகிய கிராமங்களில் புதிதாக 2 ஆராதனை மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லுட்கியைக் கண் பிரச்சனையிலிருந்தும், மினித்தா முர்முவை மனநோயிலிருந்தும், சுபிலால் டுடு மற்றும் மராங் முர்முவை வலிப்பு நோயிலிருந்தும் தேவன் குணமாக்க; குட்கு மற்றும் உலதூர் பகுதிகளிலுள்ள ஆராதனை மையங்கள் விரைவில் திருச்சபைகளாக மாறுவதற்கான வளர்ச்சிப் பெற; புதிய தொடர்பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது ஊழியங்களைப் பலக்கோணங்களில் தடைசெய்யும் மானிக்பூர் கிராம சாருத் டுடு, குட்கு கிராம மராங் முர்மு, நிமாய் ஹஸ்தா, கந்தூன் முர்மு, ஸ்டீபன் முர்மு, சஞ்ஜிலி சோரேன் ஆகியோர் இயேசுகிறிஸ்துவால் தொடப்பட ஜெபிப்போம்.

### தபன்:
### கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்; ரஞ்சன் காசலா, சதீஷ் குமார்

**துதிக்க:** கடிட்டோலா கிராம பன்சாரி மராண்டி பிசாசின் பிடியிலிருந்து அற்புதமாக விடுவிக்கப்பட்ட மாத்தி ரத்தில் தனக்கிருந்த தீராத வயிற்று வலியிலிருந்தும் சுகமாக்கப்பட்டார். சதீஷ் மற்றும் ரஞ்சன் பெரிய இரு சக்கர வாகன விபத்தினின்று காப்பாற்றப்பட்டனர். இயேசு திரைப்பட நிகழ்ச்சிகளின் வாயிலாக 7 கிராமங்களைச் சந்திக்கவும், வீடுகள்தோறும் சென்று அம்மக்களிடம் இயேசுவின் அன்பைப் பகிரவும் தேவன் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவோசி என்ற கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனையில் அநேகர் பங்குப் பெற; தபன், கங்காராம் ஆகிய பகுதிகளில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டிருக்கும் விஷயத்தில் தேவ அநுக்கிரகம் ஊழியர்களுடனிருக்க; வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளில் விசுவாசிகள் ஆர்வமாகக் கலந்து கொள்ளவும், அவர்களது உறவினர்களையும் நண்பர்களையும் கூட இயேசுவின் மந்தையில் இணைத்திட பாரம் கொள்ளவும்; நகதஹார் கிராம ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் நிறைவடைய ஜெபிப்போம்.

**17**
**நவம்பர்**
**புதன்** உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹேமலதா ஆபிரகாம்

### பாலுர்காட்: ஹரமோகன் & சூசம்மா

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹரிபூர் கிராம சுசில் ஹஸ்தக் தனது நிலத்தின் ஒரு பகுதியை ஆலயம் கட்ட நன்கொடையாகக் கொடுத்துள்ளார். கோடம் கந்தி, தெகிதோலா, மங்கல்பூர் மற்றும் ராஜ் பூரில் நடைபெற்ற மாலைநேர ஜெபக் கூடுகைகளையும், இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளையும் தேவன் ஆசீர் வதித்துத் தந்தார். சல்காச்சி கிராம சோமாலி டுடுவை தேவன் தீய ஆவியின் பிடியினின்று காப்பாற்றியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல பகுதிகளில் நடைபெறவுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதத்திற்காக; குடகொட்டா கிராமத் தலைவர் ராம் கிஸ்கு, மதுபூர் கிராம ராபின் மர்தி, கமர்போத்ரா கிராம பிண்டு டுடு, கத்தாங் கிராம லுசியா திகா, குடகொட்டா கிராம பிஸ்வநாத் முர்மு, சோனத்தான் முர்மு, அமின் முர்மு, குல்பீர் கிராம சோம் பெஸ்ரா, ரிண்டு பெஸ்ரா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; ஹரிபூர் கிராமத்தில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப் பணிக்கான நிலச்சான்றிதழ்களின் வேலைகள் விரைவில் சுமூகமாக நிறைவு பெற ஜெபிப்போம்.

## அஸோம்

### வடகிழக்குப் பிராந்தியம்:

**C.H. ஜாண் & வேணி**

**துதிக்க:** புதிதாக 11 நபர்கள் விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை நெருங்கி வந்துள்ளனர். கொடிய வைரல் தொற்றிலிருந்து நமது விசுவாசிகளில் அநேகர் சுகம் பெற்றுள்ளனர். லோக்ரா பகுதி விசுவாசிகள் ஊழியத்தில் தீவிரமாகப் பங்கேற்கின்றனர். கோங்கெர் மற்றும் ரங்கனாடி பகுதிகளிலிருந்து அநேக மக்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்க தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிஸ்ஸிங் மற்றும் தியோரி இன விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ஆகுத்தி, சில்க், பெக்கிலி, பூமி, அகர்பூரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் உள்ளூர் விசுவாசிகள் மனப்பூர்வமாய் ஈடுபட; நமது ஊழியத் திற்குப் பலவிதங்களில் இடைஞ்சல் உண்டு பண்ணுகின்ற ரிம்ஜிம் தியோரி, திரோ தியோரி மற்றும் ஜித்தோ சரோ மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## *வாலிபப்பெண்ணின் ஜெபத்தினால்!*

*உத்தரப் பிரதேசம், கைம்கஞ்ச் பணித்தளத் திலுள்ள கம்பிள் கிராம நமது விசுவாசி ஸீஸ்ராமின் மகள் வந்தனா என்ற வாலிபப் பெண், அநேகருக்காக ஜெபிக்கும் வழக்க முடையவர். ஒருநாள் இரவு, இவர் தனது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் ராஜேஷ் என்பவரின் இல்லத்திலிருந்து மிகப்பெரிய சத்தம் உண்டானதினால் அங்குச் சென்று பார்த்தபோது, அங்குள்ள யாவரும் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு அலறிக்கொண்டிருந்ததைக் கண்டார். உடனே இவர் ஜெபம் செய்ய, கர்த்தர் அவர்கள் யாவரையும் சுகமாக்கினார். எனவே ராஜேஷின் மகள் கோமதி, நமது ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு தேவனை நன்றியுடன் துதித்தாள். அல்லேலூயா!*

## 18 நவம்பர் வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜாக்குலின் பெஞ்சமின்
திரு. த்சாங்சே சங்தம், திரு. ஸ்டான்லி P.

### கோஹ்பூர்:
**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** புதிதாக 6 நபர்களைக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வரச் செய்ததோடு, பிசோலா மற்றும் தக்சாபுரி பகுதிகளில் புதிதாக 2 ஆராதனைக்குழுக்களை உருவாக்கவும் தேவன் அருள் புரிந்தார். பிசோலா கிராம நமது சுதேச ஊழியர் கேசாப்பை சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் கரங்களுக்கு தேவன் விலக்கிக் காத்தார். நமது ஊழியத்தில் ஜோதி, அருண், ராம்பிரசாத் ஆகியோரைத் தன்னார்வ ஊழியர்களாக இணையும்படி கர்த்தர் வழிநடத்தியமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லுகித்முக், குட்டுகௌன், பாகுமாரி ஆகிய கிராம மக்களின் ஆத்தும மீட்பிற்காக; கள்ளப்போதகர்களால் திசைதிருப்பப்படுகின்ற நமது சுதேச ஊழியர் மகேஷிற்கு தேவன் தமது பரம ஞானத்தை வெளிப்படுத்தி, நல்வழி தவறாமல் நடக்கச் செய்ய; குர்பெட்டி பகுதியில் ஓர் ஆலயம் கட்டப்பட; கோஹ்பூர் பணித்தளத்திலுள்ள 14 திருச்சபைகள் அதிலும் குறிப்பாக அகோத்குரி, தொண்டிபோதர், பாலிகௌன், லுகித்முக் ஆகிய திருச்சபைகளில் எழுப்புதல் உருவாக ஜெபிப்போம்.

### மஜுலி:
**ரபீந்திர முர்மு & செலினா மராண்டி**

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 120 கிராமங்களில் நடந்துக்கொண்டிருந்த ஊழியத்திற்கான ஆய்வுப்பணி சிறப்பாக நிறைவுற்றது. கய்லிச்சாபுரி கிராம ஆலயக்கட்டுமானப்பணி முடிவு பெறும் நிலைக்கு வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுபன் சேரி ஆற்றினுடைய இயற்கை ஊடுருவலின் மூலம் தனிமைப்படுத்தப்படப் போகும் மொலயச்சாபுரி கிராம விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; சாரிகுரியா மற்றும் லிலாபாரி கிராமங்களில் 2 ஆராதனை மையங்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

### லக்கிம்பூர்:
**ஆரோன்சிங் நர்சாரி & ரீனா**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். நமது எல்லாத் திருச்சபைகளிலும், ஆராதனை மையங்களிலும் தடையின்றி ஆராதனைகள் நடைபெற தேவன் அநுக்கிரகம் ஈவதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் நமது விசுவாசிகள் ஆத்தும பாரத்துடன் பங்கெடுக்க; டோபிராம் பாங்கிங்கைக் காசநோயிலிருந்தும், ரூபா சோனாவால் மற்றும் புனிதா மேதாக்கை வலிப்பு நோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; தாகு கிராம ஆலயக்கட்டுமானப்பணி சிறப்பாக விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

**19**
**நவம்பர்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. எலிசபெத் சொர்ணா துரைராஜ்
திருமதி. பசந்தி பாசுதேவ் மால்தோ

# சத்தீஸ்கட்

## லக்கன்பூர்: அருண் குமார் & சாரதி

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. நமது சுதேச ஊழியர் மனோஜின் மகனை அதிக பெலவீனத்தி லிருந்து தேவன் மீட்டார். ஞாயிறு விடுமுறை வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியை தேவன் அதில் பங்கெடுத்த 23 நபர்களுக்கு ஆசீர்வாத மாக்கிக் கொடுத்தார். தீபக் என்பவர் தன்னார்வமாக நமது ஆராதனையிலும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளிலும் புதிதாக வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் நாட்களில் நடக்க விருக்கின்ற வாலிபர் நிகழ்ச்சியைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர; திட்டமிட்டபடி 30 இடங்களில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படவும், அந்நிகழ்ச்சிகளின் மூலம் அநேகர் கிறிஸ்துவில் வேரூன்றி வளரவும்; பக்ஜாம் கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## பத்தல்காவ்:
## பாலமுருகன் & அன்புமலர்

**துதிக்க:** தர்ராபாரா திருச்சபையில் வைத்து நடந்த 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். காஞ்சிமோடா கிராமத்தில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சி மூலம் ஒரு குடும்பம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளது. அம்மனாரா, பாலுபக்னா, இலா, சுக்ரபாரா ஆகிய பகுதி திருச்சபைகளில் அநேக புதிய குடும்பங்கள் நமது ஆராதனைகளில் வந்து கலந்து கொள்ள தேவன் அவர்களை வழிநடத்தி வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளான அனிலா கவார், புலுபாய் ரத்தியா, ராஜ்குமாரி ரத்தியா, காயத்ரி ரத்தியா, ரூபினா, ஜெசிந்தா, மாசி பிரகாஷ் ஆகியோர் குழந்தை பாக்கியம் பெற; நமது ஊழியத் திற்கு இடையூறு செய்யும் காயா கிராம அத்மன் குசுர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## பிரதாப்பூர்: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பக்னீ, மகுவா, பாரா கோண்ட் இன மக்கள் மத்தியில் சுவிசேஷத்தின் மூலம் ஓர் திருப்புமுனையை உருவாக்க தேவன் உதவி செய்துள்ளார். தீராத பெலவீனத்திலிருந்து ஷாம்கார் தயாளன் குடும்பத்தையும், மூச்சுத்திணறல் பிரச்சனையிலிருந்து நமது விசுவாசி மார்ஷலின் பச்சிளங் குழந்தையையும் தேவன் அற்புதமாகச் சுகமாக்கியதற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகுவாபாரா மற்றும் ராம்பூர் பகுதிகளிலுள்ள நமது புதிய தொடர் பாளர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கும் சாகர் கிராமத்தைச் சார்ந்த ஒரு புதிய குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக; பல இடங்களில் நடக்கும் எதிர்ப்பான சூழ்நிலைகளிலும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் திடமனதுடன் நிற்க ஜெபிப்போம்.

## 20 நவம்பர் சனி

### வாட்ராஃப் நகர்:
**பூபதி & பாலின் மேரி**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. ஒஹாரி, சலதாபூர், லமூரி, புலிபுதுமன் ஆகிய பகுதிகளில் மீண்டும் ஆராதனைகள் தொடங்க தேவன் அருள் செய்தார். பிரேம் நகர், ரெகத், சரத்பூர் மற்றும் சாந்திபூர் பகுதிகளில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். லமூரி கிராம நமது விசுவாசி மாரமி தன்னை முழுநேர ஊழியப்பணிக்கென அர்ப்பணிக்க தேவன் தந்த கிருபைக் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாட்ராஃப் நகர் பகுதிக் குள்ளடங்கிய 120 கிராமங்களிலும் சுவிசேஷ வசனங்கள் பரவிச் செல்ல; சுவிசேஷத்தை ஏற்கனவே கேட்டிருக்கும் கிராம மக்களின் ஆத்ம மீட்பிற்காக ஜெபிப்போம்.

## குஜராத்

### போடேலி: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்து வண்டை வந்துள்ளனர். கந்தன்பூர் கிராம திருச்சபையிலுள்ள பெண்கள் தாங்கள் தீர்மானித்தபடியே வாரந்தோறும் தவறாமல் ஜெபக்கூடுகைகளை நடத்த தேவன் உதவிசெய்கிறார். கர்வா கிராமத்திலுள்ள சிம்ஜிபாய் குடும்பம் நமது ஆராதனையில் தவறாமல் கலந்து கொள்கின்றனர். சார்ஜிந்தா கிராமத்தைச் சார்ந்த சானிபேன், ஜோதி ஆகியோரை வலிப்பு நோயிலிருந்தும், பத்ரெரி கிராமத்தைச் சார்ந்த ருத்திக்பாயை மூல வியாதியிலிருந்தும் சுகப்படுத்திய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஈஸ்வர்பாய் குடும்பம் இரட்சிக் கப்பட; சிச்சிந்தா கிராம குருஜிபாய், அர்வின்பாய், பெர்குவா கிராம சுகிபாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையடைய; நமது விசுவாசிகளின் நிலங்களிலுள்ள பயிர்கள் நோயால் பாதிக்கப்படாமலும், அறுவடையின்போது நல்ல சாகுபடி கிடைக்கவும் ஜெபிப்போம்.

### தராம்பூர் & கொர்காம்:
**விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்**

**துதிக்க:** சதாடுகு கிராமத்தில் 4 குடும்பங்களிலும், அதைச் சுற்றியுள்ள 4 கிராமங்களிலும் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது பணித் தளங்களிலுள்ள விசுவாசிகளின் மத்தியில் பலவிதங்களில் எழுப்புதல் உண்டாக தேவன் உதவி செய்தார். சதாடுகு கிராமத்தைச் சார்ந்த ரீனாபேனிற்கு இருதயக்குழாய்ப் பிரச்சனையிலிருந்து சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடியா பட்டேல், வகியா இன மக்களின் மத்தியில் எழுச்சி உண்டாக; நமது பணித்தளங்களிலுள்ள விடுதிப் பிள்ளைகள் வருங்காலங்களில் 2-ம் நிலைத் தலைவர்களாக உருவாக; பூல்வா திருச்சபையில் பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; சிக்லி, பிப்பள்காட், கரஞ்சேரி, ரான்குவா, அனாவல் மற்றும் வல்சால் ஆகிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

## 21 நவம்பர் ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பரிமளம் ஐசாயா
திருமதி. ஜெஹாலின் ஜெமி ஜெயசேகர்
திருமதி. மன்பிரீத் கௌர் அய்யனார்

### நேத்ரங் & வலியா:

**மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்**

**துதிக்க:** ரூஸ்வாட் என்ற கிராமத்தில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. பான்டேபேடா கிராமத்தில் நடைபெற்ற சிறுவர் முகாமில் 40 குழந்தைகள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றனர். 6-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை படிக்கும் நமது விடுதிப்பிள்ளைகள் பள்ளிகள் திறக்கப்படப்போவதால் தங்கள் வீடுகளிலிருந்து சுகமாய் விடுதி வந்து சேர்ந்தனர். கட்காச் கிராம ஞாயிறுப்பள்ளி குழந்தைகள் தங்களது பெற்றோர்களை ஆலய ஆராதனைக்கு அழைத்து வருகிறதை நினைத்து தேவனை நன்றியோடு துதிப்போம்.

**ஜெபிக்க:** தினேஷ் பாய் குடும்பம் இரட்சிக்கப்பட; சினோரா கிராமத்தில் பஜன் கூடுகைகளை ஆரம்பிக்க தேவன் திறந்தவாசலைக் கொடுக்க; நமது விசுவாசி கமலேஷிற்கு நல்ல வாழ்க்கை துணையமைய; கடுலாக் கிராம திருச்சபையில் பஜன் கூடுகை களும், திருவிருந்து ஆராதனைகளும் மீண்டும் துவங்கப்பட ஜெபிப்போம்.

### அஹ்வா & டாங்ஸ் வெளிப்புற சந்திப்பு ஊழியம்:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** சாய்மால் கிராமத்தில் 23 நபர்களும், பிப்பள்வாடா கிராமத்தில் 21 நபர்களும் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். போவாரியா, பம்னமால் கிராமங்களிலுள்ள விசுவாசிகள் தங்களது காணிக்கைகளை அதிகப்படுத்தி, சுவிசேஷகர்கள் மற்றும் உபதேசியார்களின் நிதித்தேவையைச் சந்திக்க தேவன் உதவி செய்தார். வசுர்னா கிராம ஹன்சாபேனிற்குத் திருமணமாகி 7 ஆண்டுகளுக்குப்பிறகு குழந்தை செல்வம் கிடைத்துள்ளது. போவாரியா, பம்னமால் கிராமங்களில் உள்ள பெண்கள் செவ்வாய்க்கிழமை தோறும் குழுவாக இணைந்து தேசத் திற்காய் ஜெபிக்கும் பாரத்தை தேவன் தந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது மனைவியை ஆலய ஆராதனைகளுக்கு வரவிடாது தடுக்கும் துங்கர்தா கிராம சுரேஷ்பாய் மனந்திரும்ப; அரசாங்கத்திட்ட உதவியின் கீழ் வீடு கட்டும் காரியத்தில் நமது விசுவாசிகளுக்கு அநுகூலமாக இராம லிருக்கும் கலம்பா கிராமத்தலைவர்கள் யாவரும் நல்மனதுடன் அத்திட்டத்தை அனைவருக்கும் அமல்படுத்த; நமது ஊழியங்களைத் தடைசெய்யும் சப்ரிதாம் கிராம ஆஷ்மன், சிவுபாய், விகாஷ்பாய் ஆகியோரை தேவன் தம் அன்பின் கரத்தால் தொட; பாரிபாடா, பர்திபாடா, குர்தியா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க ஜெபிப்போம்.

## 22 நவம்பர் திங்கள்

### சஹயாத்ரி பிராந்தியம்:

**வினு P. & சுகிமலர்**

**துதிக்க:** 88 நபர்கள் கிறிஸ்துவின் மீது தாங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தை தைரியமாக அறிக்கை செய்தனர். 12 கிராமங்களில் சுவிசேஷம் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாதர்வேதா பகுதியில் இருந்து 9 குடும்பங்கள் புதிதாகக் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். மொட்டபோண்டா பகுதியில் சுதேச ஊழியர்களின் பயிற்சிக்கூடுகையைச் சிறப்பாக நடத்தி முடிக்க தேவன் காட்டிய ஒத்தாசைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பதிபூர் மற்றும் போபி ஆகிய இடங்களில் கனமழையினிமித்தமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆலயக்கட்டுமானப்பணிகள் மீண்டும் தொடங்கப்பட; தபிலோனா, வல்சான், கொர்தி, கோபா, சாதர்வேதா ஆகிய இடங்களில் ஆலயக் கட்டுமானப் பணிக்கான பத்திரச் சான்றிதழ்களின் வேலைகள் நிறைவு பெற; குடியா பட்டேல் மற்றும் வகியா இன மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; 12 பணித்தளங்களில் நடத்த நினைத்திருக்கும் நாடக ஊழிய நிகழ்ச்சிகள் யாவும் மிகுந்த ஆவிக்குரிய பலனைக் கொடுக்க ஜெபிப்போம்.

### செலம்பா: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** ஒரு நபர் புதிதாக இயேசுகிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துள்ளார். ஒரு கிராமம் புதிதாக இயேசுவின் நற்செய்தியினால் சந்திக்கப்பட்டுள்ளது. ஊரடங்கினால் உண்டான அதிக இடைவெளிக் காலத்திற்குப் பின் மீண்டுமாக நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்குக் கிருபையாகக் கல்விப் பயிலும் சிலாக்கியத்தை தேவன் கட்டளையிட்டதற்காக; அம்பிகான் கிராம நமது விசுவாசியின் மகள் ரெபேக்கா, தான் திருமணமாகி கான்புடி கிராமத்திற்கு வசிக்கச் சென்றிருப்பதினால், அங்குள்ள மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கும்படி அவர் நமது மிஷனெரிகளுக்கு விடுத்துள்ள அழைப்பிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கன்பிபைபர் கிராமத்தில் நமது விசுவாசி சோமாபாயின் மரணத்திற்குப்பின் நின்று போயிருக்கும் ஜெபக்கூடுகை மீண்டும் ஆரம்பிக்கப்பட; சுவிசேஷத்தின் மீது விருப்பம் காட்டும் தோப்னா பிப்ரி கிராம அமர்சிங்பாய் மற்றும் சீஸ்குட்டா கிராம கோவிந்த்பாய் ஆகியோரின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

### ஜெபம் தரும் விடுதலை!

*மத்தியப் பிரதேசம், கால்வா பணித்தளத்தில் 22 வயது நிரம்பிய ஜித்தன், அமாவாசை - பௌர்ணமி நாட்களில் இரத்த வாந்தியெடுப்பது வழக்கம். மருத்துவ ரீதியாகவும், மந்திர சக்தியினாலும் அவரது இச்சுகவீனத்திற்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவரது வீட்டார் அனைவரின் கவனமும் அவர் மேலேயே இருந்தது. அத்தருணம், 16 வயது நிரம்பிய ரங்கோலி என்ற அவரது சகோதரியும் திடீரென காணாமல் போய்விட்டாள். அதனால் குடும்பத்தினரும் கிராமத்தினரும் அவளைத் தேடி அலைந்த சூழ்நிலையில், அருகாமையிலுள்ள இல்லத்தில் மறுநாள் அவள் மயக்க நிலையில் இருந்ததைக் கண்டுபிடித்து, அவளை வெளியே தூக்கி வந்தபோதுதான் அவளும் பிசாசினால் பிடிக்கப்பட்டுள்ளார் என அறிந்தனர். இதனால் அவர்கள் ஊழியர்களாகிய எங்களை ஜெபிக்க அழைத்தனர்; நாங்கள் சென்று ஜெபித்தோம். தேவன் அவர்களை விடுவித்தார். இப்புதிய அனுபவத்தினால் கிறிஸ்தேசுவைப் பற்றி அதிகம் அறிந்துகொள்ள அவர்கள் குடும்பமாக ஆலயத்திற்கு வந்தனர். தற்போது கிரமமாக ஆலயத்திற்கு அவர்கள் வருவதோடு, சபை உறுப்பினர்களாகவும் ஆயினர். கிறிஸ்துவுக்கே புகழ்!*

23
நவம்பர்
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ஜாஷ்வா K.S.
திரு. ஜாண்பால் ஹாரிஸ்
திரு. மங்கோல் கிஸ்கு

# தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

### கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** லதாபேன், மயூரிபேன், ராஜேஷ் பாய் மற்றும் மகேஷ்பாயின் குடும்பங்கள் புதிதாகக் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். புற்றுநோய்க்கான சிகிட்சையை இலவச மாக மேற்கொள்ளும்படி தேவன் ரமேஷ் பாயிற்கு உதவி செய்தார். ஜெபத்தின் மூலம் நமது விசுவாசி அனிதாபேனிற்கு ஒரு மருந்துக்கடை வைக்க தேவன் கிருபை செய்தார். நீண்டநாள் இடை வெளிக்குப்பின் மீண்டுமாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்ள தேவன் சந்தோஷ்பாயிற்குப் பாராட்டிய தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள வாலிபர்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; அதிக கனமழையின் மத்தியிலும் நமது விசுவாசிகளுக்கு தேவன் விவசாயத்தில் பாதுகாப்பான நல்லறுவடையைக் கட்டளையிட; நமது விசுவாசி லதாபேனிற்கு மழலை பாக்கியம் கிடைக்க; மயூரிக்கு முதுகுத்தண்டுவட வலியிலிருந்தும், ராஜேஷ்பாயின் மகன்களுக்குத் தைராய்டு பிரச்சனையிலிருந்தும் பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### சில்வாசா :
### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** 88 நபர்கள் புதிதாகக் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ளது. பற்பல இடங்களில் 4 ஆலயங்கள் கட்டுவதற்கான அரசாங்க அனுமதி கிடைக்க தேவன் உதவி செய்தார். 4 பகுதிகளில் நடத்தி முடித்த வாலிபர் நிகழ்ச்சிகளை தேவன் அவர்களுக்கு ஆசீர்வதித்துக் கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபர் நிகழ்ச்சிகளின் மூலம் திரளான வாலிபர்கள் தங்களைச் சுதேச ஊழியர்களாக ஆண்டவருடைய பணிக்கென அர்ப்பணிக்க; கோக்கடி கிராம ஆலயம் விரைவில் நல்லமுறையில் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** பிப்பரிபாடா மற்றும் நகர் போயடி கிராமங்களில் முதல்முறையாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நந்திதா, வாதி, உம்ரதா ஆகிய கிராமங் களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. வகனியாபானி, கொடிதா, மஜானி, சாக்கடு, போர்பானி ஆகிய கிராமங்களில் ஊழியப்பின் தொடர்பணிகள் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது 7 திருச்சபைகளில் பிரச்சனைகளை உண்டுபண்ணி வைத்திருக்கும் நமது முன்னாள் சுதேச ஊழியர்கள் மனந்திரும்பவும், அப்பிரச்சனைகள் விரைவில் நல்தீர்விற்கு வரவும்; சில வருடங்களாகவே தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கருச்சிதைவு பிரச்சனையினால் பிள்ளைப்பேறு அற்றுக் காணப்படும் நவகான் கிராம மங்கலாபாய் விரைவில் அற்புதமாகக் குழந்தை பாக்கியம் பெற ஜெபிப்போம்.

## 24 நவம்பர் புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா செல்வி ஹென்றி
திருமதி. கிரண் பெங்ரா லவ்லின்

### கட்சாந்தூர்: வசாவா அரவிந்த் குல்சிங் & எஜு; எலிசா தய்மி

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை வந்துள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. லிங்கி பகுதியில் நடந்த பெரிதளவு வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சி மூலம் அநேகர் சுவிசேஷத்திற்குச் செவிமடுத்தனர். காட்கி மற்றும் புனகுடா கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகள் கூடுகை அநேகருக்குப் பெரும் ஆசீர்வாதமாக அமைய தேவன் உதவி புரிந்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரமேஷ் தாக்ரே, வெங்கடேஷ், குட்சாங்கி, ரோஷன், சந்திரமன், பப்லு, சுசிலா காதி, சுபாஷ், மீனா, பிலத்ரா, கோவிந்தா ஆகியோரின் குடும்ப மக்களுடைய இரட்சிப்பிற்காக; லயிதா ஜாதவ் இரத்தப்புற்றுநோயிலிருந்தும், வினோத் காதி பக்கவாதத்திலிருந்தும், வித்யா மனவியாதியிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

### ஜிம்மலாகட்டா: ஸ்ரீனிவாசா & சுனிதா

**துதிக்க:** புதிதாக இரு நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். ஒரு திருச்சபை புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நேத்ருவாகு மற்றும் மாரபள்ளி கிராமங்களில் நடத்திய ஊழிய நிகழ்ச்சிகளுக்கான தேவைகளை அங்குள்ள விசுவாசிகளே சந்திக்க தேவன் கிருபை தந்தார். நந்தி கௌன் கிராம லட்சுமண் குடும்பம் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்கின்றனர். ஜெபத்திற்கென பெண்கள் ஓரிடத்திற்கு கிரமமாகக் கூடி வருவதோடு, பிற இடங்களுக்கும் சென்று ஜெபக்குழுக்களை உருவாக்கி நடத்தி வருகின்றனர். மன்யா கோயா சமுதாயத்தினர் சுவிசேஷத்திற்கு அடிபணிய தேவன் கிரியை செய்து வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது பல மிஷனெரிப்பணித் தளங்களிலுள்ள சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் சுவிசேஷ ஊழியத்தை ஆதரிப்பவர்களாக மாற; கோயா கோண்ட்ஸ், மடியா கோண்ட்ஸ், மன்யா கோயா, நிதகானி போன்ற மக்களினங்கள் மத்தியில் பெரும் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

### கர்த்தரின் பரிசுத்தத்தை விளம்பிய அசுத்த ஆவி!

*ஹிமாச்சலப் பிரதேசத்திலுள்ள ராம்பூர் பணித்தளம், ரகோலியிலுள்ள விமலா வீட்டுக்குடியிருப்பில் நமது ஊழியர்கள் இரவுநேர ஜெபக்கூட்டம் நடத்தினர். 3 புதிய தொடர்பாளர்கள் அதில் பங்குப்பெற்றனர். கூட்டத்தின் முடிவில் விமலா என்ற சகோதரி தனது குடும்பம் மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளைச் சொல்லி, யாவரும் அவருக்காக ஜெபிக்கும் தருணத்தில் அவர் கீழே விழுந்து மூர்ச்சையானார். அவருக்குள்ளிருந்த அசுத்த ஆவி பெருமூச்சுடன் முனங்க ஆரம்பித்தது. அது “நான் இவளைக் கொன்று விட்டு தான் செல்வேன்” எனக் கூற, நமது ஊழியர்கள் அவர் நெற்றியில் சிலுவை அடையாளத்தில் ஜெபத்துடன் எண்ணெய்ப் பூசியபோது அந்த ஆவி, “என் நெற்றியில் ஏன் அந்த எண்ணெயைத் தடவினீர்கள்? அது மிகவும் பரிசுத்தமானது, தயவு செய்து அதை மீண்டும் என் மீது தடவாதீர்கள்!” என்று சத்தமிட்டது. அவர்கள் இயேசுவின் நாமத்தில் அந்த அசுத்த ஆவியைக் கடிந்துகொள்ள, அவர் மறுபடியும் மயக்கமானார். ஆயினும் சில நிமிடங்களில் அவர் சுயநினைவடைந்து, முழு சுகத்துடன் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினார். அல்லேலூயா!*

**25**
**நவம்பர்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மிரிலா சம்பிரமரி
திருமதி. ரூத் ஸ்டான்லி, திரு. டெப்ரட்டோ பிஸ்வாஸ்
செல்வி. வசாவா அருணாபேன் டாமனியாபாய்

## கான்தேஷ் பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி & நேர்:

**அஜய்குமார் லிமா & பிரத்யாசினி**

**துதிக்க:** புதிதாக 29 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப் பட்டுள்ளது. காந்தேஷ் பீலி மொழியில் நடைபெற்று வரும் பழைய ஏற்பாட்டு வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி வெகு சிறப்பாக நடந்தேறி வருகிறது. நீண்ட நாட்களாகச் செய்த ஜெபத்தின் விளைவாக கலாம்பீர் கிராமத்தில் ஆலயம் கட்ட தேவன் ஓர் அழகிய நிலத்தைக் கொடுத்தது மாத்திரமல்லாது, அதை FMPB - யின் பெயரில் பதிவு செய்யவும் காண்பித்த கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காந்தேஷ் பீலி மொழி பேசும் அனைத்து அவ்வின விசுவாச மக்கள் கரத்திலும் அம்மொழியில் மொழிப்பெயர்க் கப்பட்டுள்ள புதிய ஏற்பாடு சென்றடைய; ஒலி வழி வேதாகமப்பணி விரைவில் இம்மொழியில் செய்யப்பட; கலாம்பீர் கிராம ஆலயத்தைக் கட்டுவதற்கான பஞ்சாயத்து அனுமதி சுலபமாகக் கிடைக்க; மால்பூர் கிராமத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட; நேர் பணித்தளத்திலிருந்து கிறிஸ்தவ விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ள 2 நபர்களின் ஆவிக்குரிய வாழ்வு கிறிஸ்துவால் மேலும் வளர்ச்சியடைய ஜெபிப்போம்.

## கான்தேஷ் பிராந்தியம்:

**M. வினு & சுபிலா**

**துதிக்க:** 20 கிராமங்களில் உபவாச ஜெபங்கள் நடத்த தேவன் அநுக்கிரகம் தந்தார். நமது விடுதிப்பிள்ளைகளில் 19 பெண் பிள்ளைகளும் 10 ஆண் பிள்ளைகளும் தங்களது 10-ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சிப் பெற தேவன் ஒத்தாசை ஈந்தார். நமது விசுவாசி சுரேகாவிற்கு தேவன் தந்த குழந்தை செல்வத்திற்காக நன்றியுடன் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ள 61 கிராமங்களிலும் ஆராதனைகள் ஆரம்பிக்கப்பட; தட்கோன் பணித்தள ஹஜத் கேதி மற்றும் காந்த்பாரா பணித்தள டோங் கிராமத்திலும் ஆலயங்கள் எவ்வித எதிர்ப்புமின்றிக் கட்டப்பட; கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் நந்தூர்பார் சிறுமியர் விடுதி மற்றும் தலோடா சிறுவர் விடுதிகளின் ஆசிரியர் மற்றும் விருந்தினர்களுக்கான அறைகளின் பணிகள் யாவும் விரைவில் சிறந்த முறையில் முற்றுப்பெற ஜெபிப்போம்.

## சித்தாரா பிராந்தியம் :

**சஞ்சீப் குமார் & ஸ்வர்ணலதா**

**துதிக்க:** 35 நபர்கள் தங்களது கிறிஸ்தவ விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கை செய்தனர். தேவன் ரிங்குபாயையும் கிர்மா பாயையும் பிசாசுகளின் பிடிகளிலிருந்து விடுவித்தார். குஞ்ஜீரி, தோகிடி, மந்தனா ஆகிய பகுதிகளில் புதிய திருச்சபைகள் நிறுவப்பட தேவன் உதவி நல்கினார். குடித் கிராமத்தில் நடந்த மூப்பர்கள் கூடுகையில் 30 மூப்பர்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற கர்த்தர் காட்டிய தயவிற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் உள்ளங்கள் கிறிஸ்துவில் கனிய; புலம் பெயரும் நமது விசுவாசிகளின் முழு பாதுகாப்பிற்காக; இன்பூர் கிராமத்தில் ஊழியம் செய்ய நமது ஊழியரை அனுமதிக்காத அக்கிராம எதிர்ப்பாளர்களைக் கர்த்தர் சந்திக்க; டெங்கு காய்ச்சலின் மூல மாகத் தனது மனைவியை இழந்து தவிக்கும் நமதாலய மூப்பர் லால்சிங்கின் மனம் ஆறுதலடைய ஜெபிப்போம்.

**26**
**நவம்பர்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. மனாசே டேனியல்

### சுர்கானா:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** கத்காட் மற்றும் தாதிபாடா கிராமங்களில் முதன்முறையாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பர்திபாடா கிராம பெண்கள் கூடுகை அதில் கலந்து கொண்ட 35 பேருக்கும் அதிக ஆசீர்வாதமாக அமைந்தது. கோட்டுலா கிராம நமது விசுவாசிகளின் நற்சாட்சியுள்ள ஜீவியத்தைக் கண்டு, அக்கிராம மக்களே நமது விசுவாசிகளை அக்கிராமத்தின் தலைமைப் பொறுப்புகளை ஏற்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். தேஷ்குக் சோன கவித், உத்மால் ரவீந்திரா மற்றும் விஜய்யின் குடும்பங்கள் யாவும் தேவ வசனத்திற்குச் செவிசாய்ப்பதினால் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உம்பச்சபாடா பகுதி ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையின் ஆசீர்வாதத்திற்காக; வங்கன் திருச்சபை வாலிபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பலமுறை சுவிசேஷத்தைக் கேட்டும் இதுவரை ஒரேயொரு குடும்பம் மாத்திரமே இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கும் ரசியா கிராம மக்களின் கடின மனங்கள் மாற ஜெபிப்போம்.

### பிம்பள்நேர்: பாபுராஜ் & மேபல்

**துதிக்க:** இயேசுகிறிஸ்துவைப் புதிதாக 19 நபர்கள் விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். மெலஞ்சன், கலம்பா, சிவரிமால், கவாலிபாடா, பாமுன், கௌதி, வேதர்வாடி, தவர்பார், சுப்பாடா, அனுமத்பாடா, மொலயம்பா, எர்கோடி, நர்கு ஆகிய கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. தனாலே மற்றும் மாருதி பாடாவிலிருந்து புதிய குடும்பங்கள் நமது ஆராதனையில் வந்து பங்கேற்கின்றனர். பின் மாற்றமடைந்திருந்த நமது விசுவாசி திலீப் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர தேவன் செய்த மகத்தான கிரியைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புலம் பெயரும் நமது விசுவாசிகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக; நமது விசுவாசிகளிடையே சமாதானமும், ஒற்றுமையும் காணப்பட; நமது சுதேச ஊழியர் மோகன் பரிசுத்தாவியானவரின் வல்லமையினால் நிரப்பப்பட்டு, ஊழியங்களை உற்சாகமாகச் செய்ய ஜெபிப்போம்.

### தர்ணி:

### டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி

**துதிக்க:** குத்துங்கா கிராமத்திலிருந்து புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். குசும்கெத் கிராம ராம் கலியின் விசுவாசத்தை தேவன் கனப்படுத்தி, அவருடைய வியாதிக்கு எவ்வித மருந்துமின்றிப் பூரண சுகமடையச் செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திலிருந்து மங்கலை தேவன் விடுவிக்க; லக்ஷ்மி தேவி, காந்திபாய், சுந்தர் ஆகியோரை டெங்கு காய்ச்சலிலிருந்தும், பெர்தா கிராம பப்லுவை அவரது தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்தும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

**27**
**நவம்பர்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. லிங்டின்கிம் ஹயோகிப் லுன்கிம்

# கர்நாடகா

### முண்டர்கி: தாங்லால் ஜெள

**துதிக்க:** புதிதாக இரண்டு கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது முண்டர்கி சபை விசுவாசி ஸ்வீட்டிக்கு அரசாங்க மருத்துவமனையில் செவிலியர் பணி கிடைக்க தேவன் உதவி செய்தார். சபையாரின் இடைவிடாத ஜெபத்தின் பலனால் நமது விசுவாசி ஸ்ருதி சொந்தமாக வீடு வாங்க கிருபை பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசி சாரஞ்சி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து விடுபடவும், பிரதிக்ஷாவின் குறைவான இரத்த அணுக்கள் அதிகரிக்கும்படியாகவும்; பிரபாகர் குடிப்பழக்கத்திலிருந்து மனந்திரும்ப ஜெபிப்போம்.

### ஷிக்காவ் & முன்ட்கோட்:
**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 8 வயது சிறுவனான விரேஷைப் பாம்புக்கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். கடந்த 10 ஆண்டுகளாக நீடித்து வந்த நீதிமன்ற வழக்கிலிருந்து நமது விசுவாசி எல்லப்பாவை தேவன் விடுதலையாக்கினார். நமது விசுவாசி சங்கீதா சுகப்பிரசவத்தில் பிள்ளை பெற்றெடுக்க தேவன் உதவி செய்தார். தோல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பாசம்மாவைப் பூரண சுகம் கொடுத்து ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாரப்பா, ராஜு, மஞ்சுளா ஆகியோரின் குடும்ப நபர்கள் இரட்சிக்கப்பட; சமீபத்தில் தன் கணவனை இழக்கக்கொடுத்த 28 வயதான ஷில்பாவின் மனஆறுதலுக்காக; பசவனப்பா, நாகப்பா ஆகியோர் சிறுநீரகப் பிரச்சனைகளிலிருந்து குணமாக; நீதிமன்ற வழக்கிலிருந்து புஷ்பா மற்றும் மெயில்ராரி விடுவிக்கப்பட; பகிரப்பா, ஷிவாஜி ஆகிய நமது விசுவாசிகளுக்கு ஏற்ற வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

### கஜேந்திரகடா:
**மஞ்யா நாயக் & ரத்னா**

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளார். மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த பாசம்மா, லக்ஷ்மியை தேவன் சுகமாக்கி ஆசீர்வதித்தார். சபை ஆராதனைக்கு வரமுடியாதபடி அலைக்கழித்துக்கொண்டிருந்த தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் எல்லம்மாவை விடுதலையாக்கியதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை ஆராதனைகளில் கலந்து கொண்டதற்காகத் தனது தாயாரை எதிர்க்கும் வினோத்தின் மனந்திரும்புதலுக்காக; சித்ரா உடல் முழுவதும் உள்ள பருக்களிலிருந்தும், ஷாம்லா வலதுகையில் காணப்படும் பலவீனத்திலிருந்தும் குணமாக ஜெபிப்போம்.

**28 நவம்பர் ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுமித் குமார் தரியானி

## நிடகுந்தி: நரேந்திர குமார்

**துதிக்க:** நமது சபை ஆராதனைகளில் அநேக மக்கள் புதிதாக வந்து இணைந் துள்ளனர். நமது விசுவாசி பார்வதி வாங்கிய நிலத்தின் ஆவணத்தை ஜெபத்தின் பலனால் திரும்பப் பெற்றுக் கொள்ள தேவன் கிருபை பாராட்டினார். ஐந்து கிராமங்களில் ஜீப்குழு மூலம் செய்யப்பட்ட ஊழியங்களில் அநேகர் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காட்டினதற் காக தேவனை நன்றியோடு துதிப்போம்.

**ஜெபிக்க:** பின்மாற்றமடைந்துள்ள பி. பி. வாடி, நிடகுந்தி சபை விசுவாசிகள் மனந் திரும்பி மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நமது விசுவாசி கீதாவிற்கு வங்கியில் வேலை கிடைக்க; நரம்புச் சம்பந்தமான பிரச்சனைகள் மற்றும் இரத்த வாந்தி யிலிருந்து பிரகாஷிற்கு தேவன் பூரண சுகமருள பாரத்தோடு ஜெபிப்போம்.

## கௌரிபித்தனூர்:

**ஃப்ரான்சிஸ் துரைசாமி & ஜெயந்தி**

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹரபனஹள்ளி கிராமத்தில் நடைபெற்ற புதிய தொடர் பாளர்களுக்கான கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். நமது விசுவாசி களான சாந்தனா, சந்திரகலா பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை அடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் பின்மாற்ற மடைந்துள்ள நமது விசுவாசிகள் மனந் திரும்ப; ராமக்காவின் நிலப்பிரச்சனை விரைவில் சுமூகமாகத் தீர்க்கப்பட; நமது இளம் விசுவாசிகளான புவனா, பார்வதி, கிளாரா, ஜேம்ஸ், அஜய், தன்ராஜ், நாகேஷ், வெங்கடேஷ், நாகேந்திரா, பிரபு மற்றும் பலரின் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காகக் கருத்தாய் ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## பலமநேர்:

**சத்தியப்பா & ஷியாமளாபாய்;**
**அனில் மஹாலி, டேனியல் சேனாபதி**

**துதிக்க:** புதிதாக 16 நபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக 2 ஜெபக்குழுக்கள் துவங்க தேவன் உதவி செய்தார். உள்ளூர் சுவிசேஷகர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கென்று நடை பெற்ற பயிற்சிக்கூடுகையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். தன்னிச்சை யாகச் செயல்படுத்தியவைகளைப் பிராந்திய அளவில் செயல்படுத்தத் திட்ட மிடப்பட்ட கூடுகையை மிகவும் பயனுள்ள தாக தேவன் மாற்றித் தந்தார். ஜி.வி. பள்ளி கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி மீனாவிற்குக் கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து பூரண சுகமருளிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷகர்கள், சபை மூப்பர்கள், தன்னார்வ ஊழியர்களுக்கான தலைவர்கள் பயிற்சி மையம் நிறுவப்பட; தொடர்ந்து நடைபெறவுள்ள ஊழிய நிகழ்வுகளை தேவன் ஆசீர்வதிக்க; குஜராத்தில் மிஷனெரிகளாகப் பணிபுரியும் நமது சுவிசேஷகரின் மகள் பியூலா மற்றும் அவரது கணவரின் சரீர சுகத்திற் காக; சம்பல்பூர் கிராமத்தில் தடைபட்டி ருக்கும் நமது சபை ஆராதனைகள் மீண்டும் துவங்கப்பட ஜெபிப்போம்.

## 29 நவம்பர் திங்கள்

### குப்பம்:

**பால் குப்புசாமி & சைலா**

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். ஜீப்குழு மூலம் 39 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், 2 கிராமங்களில் இரவுக்கூடுகைகள் நடத்தவும் தேவன் கிருபை பாராட்டினார். சிங்க சமுத்திரத்தில் புதிதாகத் திருச்சபை துவங்க தேவன் உதவி செய்தார். ஆனந்த் சியாமளா மற்றும் விஜயலக்ஷ்மிக்கு நல்ல வேலைகளைக் கொடுத்து தேவன் ஆசீர்வதித்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட 18 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்கள் செய்யப்படவும், அதில் ஒரு பெரிய திருப்புமுனையை தேவன் உண்டாக்கவும்; புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை தைரியமாய் அறிக்கை செய்ய ஆயத்தமாக; T. அக்ரஹாரம் பகுதியில் ஆராதனை துவங்கப்பட ஜெபிப்போம்.

### வி. கொட்டா:

**சஞ்சய் குமார் பீரோ & சகரிகா**

**துதிக்க:** பனகனபள்ளி, தத்தாபள்ளி, கிருஷ்ணாபுரம் மற்றும் சுந்தர்பாளையம் ஆகிய பகுதிகளில் ஊழியத்திற்கான திறந்தவாசலைத் தேவன் கொடுத்தார். வி. கொட்டா, ராமகுப்பம், பாயிரெட்டிபள்ளி ஆகிய பகுதிகளில் சபை ஆராதனைகள் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராமகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த ரனீஷ்வரி புற்றுநோயிலிருந்தும், குண்டூர் கிராம மனீஷா சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் குணமடைய; தட்டபள்ளி கிராமத்தைச் சார்ந்த விசுவாசி கமலாவின் நிலத்தகராறு சுமூகமாகத் தீர்க்கப்பட ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### தேன்கனிக்கோட்டை:

**ஜெபராஜ் & எஸ்தர் தங்கம்**

**துதிக்க:** மாரகட்டா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி ரத்னம்மாவிற்குப் பல்வேறுவிதமான நோய்களிலிருந்து தேவன் பூரண சுகம் கொடுத்தார். கஸ்தூரிக்கு நேர்ந்த தீ விபத்திலிருந்து அற்புதவிதமாகத் தேவன் அவரைப் பாதுகாத்தார். நமது விசுவாசி வான்மதிக்கு ஜெபத்தின் மூலம் குழந்தை செல்வத்தைக் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரகாஷ் & அனிதா குடும்ப வாழ்க்கையில் அமைதியும் சமாதானமும் நிலவ; கரந்தபள்ளி கிராமத்தைச் சார்ந்த ரூத் வயிற்றுப்புண்களிலிருந்து சுகமடைய; நமது புதிய தொடர்பாளர்களான ராஜேந்திரன், அஸ்வினி விரைவில் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட; கரந்தபள்ளி கிராம மாரப்பாவின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசி ஜாய் ஜெனிபர் சுகப்பிரசவத்தில் பிள்ளை பெற்றெடுக்க ஜெபிப்போம்.

30
நவம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுகந்தி புஷ்பம் ஜென்னிஸ்

## தமிழ்நாடு மண்டல அலுவலகம்:

### ஆல்பின் & விஜயராணி

**துதிக்க:** புதிதாக 44 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். நமது பணித்தளங்களிலுள்ள எல்லாத் திருச்சபைகளிலும் ஆராதனைகள் தடையில்லாமல் நடைபெற தேவன் உதவி செய்தார். மின்சாரத் தாக்குதலில் பாதிக்கப்பட்டிருந்த நமது தபால்மேடு விசுவாசி வித்யா ஜெபத்தின் மூலம் பூரண குணமடைய தேவன் உதவி செய்தார். நமது திருச்சபைகள் காணப்படும் இடங்களிலெல்லாம் வீடு சந்திப்பு, சபை மூப்பர்கள் கூடுகை ஆகியவை திறம்படச் செயல்பட தேவன் கிருபை பாராட்டுகிறதற்காய் நன்றியோடு துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி புவனேஷ்வரிக்கு நல்ல வாழ்க்கை துணை கிடைக்க; முனியம்மாள் வீட்டில் நடைபெறும் ஜெபக்கூடுகை எவ்விதத் தடையுமின்றி தவறாமல் நடைபெற; கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவத்தை எதிர்ப்போரால் பிரச்சனைக்குள்ளாகி மூடப்பட்ட நமது முதக்கால் திருச்சபை மீண்டும் திறக்கப்பட; கூடுதுரைப்பட்டி சபை ஆராதனையில் புதிதாகக் கலந்துகொள்ளும் 2 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பின்தொடர்பணி ஊழியங்கள் மூலமாக அநேகர் கிறிஸ்துவிற்குள் தங்கள் அர்ப்பணிப்பைப் புதுப்பித்துக் கொள்ள தேவன் உதவி செய்தார். நந்தகுமார், ரத்னம், விமலன், சுரேஷ், வெங்கடேஷ், பழனி ஆகிய நமது புதிய தொடர்பாளர்களின் குடும்பங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர தேவன் உதவி செய்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பரசுராமன், முனுசாமி, ரத்தினம், ஏகாம்பரம், கண்ணகி, ஜோதி, செல்வராஜ், லலிதா, சுந்தரம்மா, சுருரப்பா, கஸ்தூரி, அருள்ஜோதி மற்றும் அனிதா ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; மஜுகொண்டஹள்ளி, கோட்டையூர் கிராம திருச்சபைகளில் பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஆட்டு இரத்த வெறியன்!

*சத்தீஸ்கட், கார்கோடா பணித்தளத்தில் சோட்டி குடா கிராமத்தைச் சேர்ந்த சர்வன் குப்தா என்பவர் அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு, தன் நிலத்தைப் பயிரிடாமல் வீட்டிலேயே படுத்திருப்பார். இதனால் அவரது குடும்பம் வருமானமின்றி உணவிற்காகத் தவித்தது. சிலவேளைகளில் அவர் ஆட்டின் தொண்டையைக் கடித்து அதின் இரத்தத்தை உறிந்து குடிப்பார். நமது ஊழியர்கள் அவரது இல்லத்திற்குச் சென்று அவருக்காக ஜெபித்தனர். தேவன் அவருக்கு முழு விடுதலை தந்தார். அவரை ஒரு புழு போன்று அற்பமாகப் பார்த்த அவரது கிராம மக்களனைவரின் பார்வையும் தற்போது மாறி, அவர்கள் சுவிசேஷம் மற்றும் ஜெபத்தின் வல்லமையை அவரில் கண்டு ஆச்சரியப்படுகின்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

மிஷனெரி ஆல்பம் 369

அஸோம், பந்துகுரி என்ற இடத்தில் லேட் திரு. பிஜோய் சம்பிரமரி & திருமதி. ராய்தி சம்பிரமரி ஆகிய கிறிஸ்தவ தம்பதியருக்கு மூத்த மகனாக அக்டோபர் 11-ம் தேதி 1978-ல் சகோ. கஜன் சம்பிரமரி பிறந்தார். இவருக்கு இரண்டு இளைய சகோதரர்களும், மூன்று இளைய சகோதரிகளும் உண்டு. இவர்கள் குடும்பமாக வடக்கு சுவிசேஷ லூத்தரன் திருச்சபையைச் சார்ந்தவர்கள் (Northern Evangelical Lutheran Church). சகோ. கஜன் சம்பிரமரி, தனது தகப்பனாருக்குப் பக்கவாதப் பாதிப்பு ஏற்பட்டதினால், குடும்பத்தேவைகளைச் சந்திப்பதற்காக ஒரு ஆரம்பப்பள்ளியில் ஆசிரியராக 4 வருடங்கள் பணிசெய்தார். ஆயினும், ஆசிரியப்பணியில் இவருக்கு மனம் லயிக்கவில்லை, மிஷனெரிப்பணியின் மீது தான் ஆர்வம் அதிகமிருந்தது. எனவே, தனது தகப்பனாரின் சுகவீன நாட்கள் முடிந்தவுடன், இவர் தனது ஆசிரியப்பணியை விட்டுவிட்டு, கொல்கத்தாவிலுள்ள கொல்கத்தா வேதாகமக்கல்லூரியில் B.Th., பட்டப்படிப்பு படிக்க எவ்விதப் பண ஆதரவுமின்றி இணைந்தார். அப்படிப்பை 2003-ல் முடித்து விட்டு, இந்திய சுவிசேஷ திருச்சபையில் இணைந்தார். அவர்கள் இவரை இருவேறு சகோதரர்களுடன் சேர்த்து, ஒரு ஆலயம் கூடயில்லாத சுந்தர்பான் தீவிற்கு முன்னோடி மிஷனெரியாக அனுப்பி வைத்தனர். கர்த்தர் அவர்களைக் கொண்டு அங்கே 13 ஆராதனை மையங்களை நிறுவ உதவிச்செய்தார். பின்பு இவர் நோய்வாய்ப்பட்டபோது, அங்கே மருத்துவ சிகிட்சைக்கு வசதிகள் எதுவுமில்லாததினால், சிகிட்சைக்கென வீடு திரும்பினார். பின்பு இவரது குடும்பத்தினர் இவரை மீண்டும் அத்தீவிற்கு அனுப்ப மனமில்லா திருந்ததினால், மேகாலயா பிரஸ்பிட்டேரியன் திருச்சபையில் வாலிபர் ஊழியத்தில் இணைந்து, ஜெயின்தியா மலைகளில் ஊழியப்பணி செய்யச் சென்றார்.

மீண்டும் 2005-ல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவைக் குறித்துக் கேள்விப்பட்டு, முழுநேர ஊழியராக நமது இயக்கத்தில் இணைந்தார். பின்பு ஒருவருட மிஷனெரிப்பயிற்சியை NIM, UP-யில் முடித்துவிட்டு, ஜார்க்கண்டில் வசிக்கும் சந்தால் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய பணிக்கப்பட்டார். பின்னர் சில காலம் கிழக்கு மண்டல அலுவலகப் பிரிவில் பணிபுரிந்தார்.

சகோதரி. ரோஷிலா மொசாஹரி, அஸோம், கொங்ராஜோரா என்ற கிராமத்தில் திரு. புத்பார் மொசாஹரி & லேட். திருமதி. ரத்தி மொசாஹரி ஆகிய கிறிஸ்தவத் தம்பதியருக்கு 5-வது மகளாக ஒரு மூத்த சகோதரன், 4 மூத்த சகோதரிகள் மற்றும் இளைய சகோதரிக்கு மத்தியில் பிப்ரவரி 2-ம் தேதி, 1981-ல் பிறந்தார். இவரும் கொல்கத்தா வேதாகமக்கல்லூரி யில் 2006-ல் தனது B.Th., பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் IMS இயக்கத்தில் மிஷனெரியாக இணைந்து மேற்கு வங்காளம், தினஜ்பூரில் பணியமர்த்தப்பட்டார். பின்பு 2008 ஜுலை மாதத்தில் நமது இயக்கத்தில் மிஷனெரியாக இணைந்தார்.

தேவ தூய நியமப்படி, சகோ. கஜன் சம்பிரமரியும் சகோதரி. ரோஷிலா மொசாஹரியும் ஏப்ரல் 20-ம் தேதி, 2009-ல் திருமணபந்தத்தில் இணைந்தனர். தற்போது குடும்பமாக இவர்கள் நமது மால்தோ விசுவாசிகளின் பிள்ளைகள் மத்தியில் முழுமையாக ஊழிய மேம்பாட்டுப்பணிகளைச் செய்து வருகின்றனர்.

கர்த்தர் இவர்களுக்கு இரு பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மகன் கிஃப்ட்ஸன் சம்பிரமரி D.O.B. (11.01.2010) ஏழாம் வகுப்பும், மகள் கிரேஸ் சம்பிரமரி D.O.B. (14.05.2013) நான்காம் வகுப்புமாக டோனாவூர், சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.



**அருட்திரு. கஜன் சம்பிரமரி & திருமதி. ரோஷிலா மொசாஹரி குடும்பம்**

Regd. Newspaper for India No.17759/69

# ஆட்கள் தேவை!

**நீங்கள்**

**மறுபிறப்பின் அனுபவம் பெற்றுள்ளீர்களா?**

**சுவிசேஷ ஊழியம் செய்ய அழைப்பு உள்ளவரா?**

**இந்தியாவின் எந்தப் பகுதியிலும் சுவிசேஷ ஊழியம் செய்யத் தயாராக இருப்பவரா?**

**நல்ல உடல் நலம் கொண்டவரா?**

**ஆண்களானால் 28 வயதிற்கு குறைவாகவும், பெண்களானால் 24 வயதிற்கு குறைவாகவும் இருப்பவரா?**

**குறைந்த பட்ச கல்வித் தகுதியாக 12–ம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவரா?**

பட்டதாரி / முதுநிலை பட்டதாரி/ மருத்துவர் / தாதியர் / மருந்தாளுனர் / எக்ஸ்ரே / ஸ்கேன் டெக்னீஷியன் / பொறியாளர் /கணினி வடிவமைப்பாளர் ஆகியோரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு :
செயலர், மனிதவள மேம்பாட்டுத்துறை
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை – 600 053

போன்: 9344743893 | இமெயில் : abraham.d@fmpb.org | hrd@fmpb.org

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***